வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 27.08.2021 வெள்ளிக்கிழமை | இதழ் : 266 | பக்கங்கள் : 16




## ஒரே நாளில் 4,602 பேருக்கு கொரோனா நாளாந்தம் உச்சம் தொடும் தொற்றாளர்

கொழும்பு, ஓக. 27

நாட்டில் மேலும் 4 ஆயிரத்து 602 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் நேற்று என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதுவே நாளொன்றில் இதுவரை அடையாளம் காணப்பட்ட அதிகளவிலான தொற்றாளர்களின் எண்ணிக்கையாகும்.

இதையடுத்து, நாட்டில் இது வரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 12 ஆயிரத்து 370 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நேற்று 2

15

## சிறுவர்களுக்கு பைசர் தடுப்பூசி

### தீவிர விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஓக. 27

சிலாபம் கொக்காவில தடுப்பூசி மையத்தில் 12 தொடக்கம் 18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு பைசர் தடுப்பூசி ஏற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் உரிய விசாரணை

15

# மக்களுக்கு சலுகைக்கு பதிலாக துன்பத்தை வழங்குகின்றது அரசு

### எதிர்க்கட்சி தலைவர் குற்றச்சாட்டு



கொழும்பு, ஓகஸ்ட் 27

இலங்கை அரசு மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குப் பதிலாக, துன்பங்களை வழங்குகின்றது என எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

15

## நாட்டை நீண்ட நாள்களுக்கு மூடிவைப்பது சாத்தியமற்றது

### பிரதமர் மஹிந்த தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 27

"நாட்டை நீண்ட காலத்துக்கு மூடிவைப்பதென்பது நடைமுறை சாத்தியமற்ற விடயமாகும். எனவே, நாட்டை மீண்டும் திறக்கும்போது மக்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும்" என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

"கொரோனா

15

## வடக்கில் நேற்று 109 பேருக்கு கொரோனா தொற்று உறுதி!

யாழ்ப்பாணம், ஓக. 27

யாழ்.மாவட்டத்தில் 53 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 109 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்

15

## 39 வயது பெண் உட்பட இருவர் யாழில் கொரோனாவால் மரணம்

யாழ்ப்பாணம், ஓக. 27

யாழ்ப்பாணத்தில் நேற்று வியாழக்கிழமை மேலும் இருவர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளனர் என்று யாழ். போதனா வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

15

## ஒரே நாளில் 200ஐ கடந்த கொரோனா உயிரிழப்புகள்

கொழும்பு, ஓக. 27

இலங்கையில் நாளொன்றில் முதல் தடவையாக 200ஐத் தாண்டிய கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன. அதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றால் உயி

15

## வடக்கில் முதன்முறை இருவருக்கு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை

### விபத்தில் மூளை சாவடைந்த இளைஞனின் குடும்பம் கொடை

யாழ்ப்பாணம், ஓக. 27

வடக்கு மாகாணத்தில் முதன்முறையாக யாழ். போதனா வைத்தியசாலையில் சிறுநீரக உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை அண்மையில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

15



## அமைச்சர் பீரிஸுடன் இணைந்து பணியாற்றுவதற்கு விருப்பம்

### இந்திய வெளிவிவகார அமைச்சர் கடிதம்





கொழும்பு, ஓக. 27

இலங்கையின் புதிய வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸுடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்ப்பதாக இந்திய வெளியுறவு அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பீரிஸுக்கு இது

15




உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

தமிழ்த் தேசிய அரசியலில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எப்போதும் தங்களை இருபத்திநான்கு கரட் தங்கம் என்று சொல்லிக் கொள்வதுண்டு.

இருபத்தி நான்கு கரட் தங்கத்தை பெறுமதியாக வைத்திருக் கத்தான் முடியும். அதனை ஆபரணமாக செய்யமுடியாது. சொல்வதானால் அது பயனற்றது. அதில் வேறு உலோகங்களைக் கலந்தால்தான் ஆபரணங்களை செய்யலாம்.

அது வேறு விடயம்.

ஆனால், விசயம், அந்த கட்சிக்காரர் எப்போதும் 'கலப்புத் தங்கங்களை' துரோகிகள் பட்டியலில் தமது விருப்பத்தைப் போல சேர்த்து விடுவார்கள்.

அவர்களின் பட்டறையில் இருந்தபோது, மற்றவர்களைப் பார்த்து துரோகிகள் பட்டம் சூட்டியவர்களில் இன்றைய யாழ்ப்பாண நகர முதல்வர் மணிவண்ணனும் ஒருவர். அவர் முன்னணியிலிருந்து வெளியேற்றப்பட்டமைக்கு காரணத்தை யாரும் தேடியறிய வேண்டியதில்லை.

ஒரு சாதாரண சிறிய கம்பனியிலிருந்து, பெரிய 'காப்ரேட்' கம்பனிவரை, ஒருவர் புதிதாக சேர்ந்தாலோ, அல்லது ஏற்கனவே இருப்பவர் ஒருவர் தனது திறமையை வெளிப்படுத்தினாலோ, ஏற்கனவே அதிகாரத்திலிருக்கும் பெரியவர்கள் அதனை விரும்பு வதில்லை. எங்கே அவர் தனது கதிரையை பிடித்துவிடுவாரோ என்ற பயம் அவர்களை சூழ்ந்து கொள்ளும்.

சாதாரண கம்பனிகளிலேயே இந்த நிலை என்றால், அரசியல் கட்சிகளில் சொல்ல வேண்டியதில்லை. சிறிய கட்சிகளிலிருந்து பெரிய தேசியக் கட்சிகள் வரை இந்தப் பிரச்னை இருக்கத்தான் செய்கின்றது.

மணிவண்ணன் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டதற்கும் காரணங்களை தேட வேண்டியதில்லை. ஆனால், அவர் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டபோது அவர் காட்சி தந்தது பெரிய விம்பமாக. அவர், மாநகர முதல்வராகியதும் அவர் மீதான பார்வை மேலும் அதிகரித்தது.

அண்மைக்காலமாக அவர் மீது நமது ஜாம்பவான் தொடர்ந்து குற்றப்பத்திரிகை வாசித்துக்கொண்டிருக்கிறார். நான் ஜாம்ப வான் என்பது, ஊடக ஜாம்பவான் வித்தியாதரனைத்தான் என்பது இந்தப் பத்தி வாசகர்களுக்கு தெரிந்ததுதான்.

யாழ்ப்பாண நகரத்தில் வீதிகளுக்குக் குறுக்காக விளம்பர பதாகைகளை வைப்பதற்காக தென்னிலங்கை நிறுவனம் ஒன் றுக்கு முறைகேடாக அனுமதி வழங்கினாரென வித்தியாதரன் தொடர்ந்து குற்றப்பத்திரிகை வாசித்துக்கொண்டிருக்கிறார்.

யாழ்ப்பாண முதல்வர் ஆசனத்தில் இன்று அமர்ந்திருக்க வேண்டியவர் அவர். கூட்டமைப்பின் வேட்பாளர் தெரிவின் போது கட்சித் தலைவர் மாவை, அவரையே முதல்வர் வேட்பாள ராக நியமிக்க விரும்பியதும், ஆனால் 'நான் ஆனல்ட்டுக்கு வாக்குக்கொடுத்துவிட்டேன், அதனை மீறமுடியாது' என்று சுமந்திரன் அடம்பிடித்து ஆனல்ட்டை முதல்வராக்கிய கதையை யும் தெரிந்தவர்கள் சிலர்தான்.

ஆனால், சில தினங்களுக்கு முன்னர், பல ஆதாரங்களுடன் வித்தியாதரன் தனது குற்றச்சாட்டை முன்வைத்திருக்கிறார். அவை சாதாரண குற்றச்சாட்டுக்கள் அல்ல. முதல்வர் முறைகேடு செய்தாரென பொதுவெளியில் குற்றச்சாட்டை முன்வைக்கிறார். அதுவும் ஒரு மூத்த ஊடகவியலாளர்.

இவர் பொத்தாம் பொதுவாக மாநகரசபை ஊழல் செய்கிறது என்று சொல்லியிருந்தால், அதற்கு எதிராக நீதிமன்றம் செல்ல முடியாதுதான். ஆனால், இங்கே அவர், முதல்வர் மீது கையை நீட்டுகிறார். எனவே முதல்வர், தான் சுத்தமானவர் என்பதை நிரூபிக்க நீதிமன்றின் உதவியை நாடலாம். தென்னிலங்கை நிறு வனம் ஒன்றிற்கு ஐம்பதுவீத விலைக்கழிவை கொடுங்கள் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு முதல்வர் தனது கடிதத் தலைப்பில் கடிதம் அனுப்பியது எதற்காக என்பதை தெளிவு படுத்த வேண்டும்.

ஒரு சட்டத்தரணிக்கு இது தெரியாததல்ல. அவர் மானநஷ்ட வழக்குப்போட்டு தனது தூய்மையை நிரூபிப்பது ஒன்றுதான் அவருக்கு முன்னுள்ள தெரிவாக இருக்கமுடியும். ஊடகவியலா ளர் மாநாட்டை நடத்தி விளக்கம்கொடுப்பது மாத்திரம் தீர்வாகாது.

நான் ஒரு ரூபாய் பணம் திருடினேன் என்று நிரூபித்தால் அரசியலில் இருந்து ஒதுங்கிவிடுவேன் என்று சவால் விடுப்பது சுலபம். ஏனெனில், வித்தியாதரன் அவர் திருடினாரெனக் குற்றம்சாட்டவில்லை. முறைகேடாக அனுமதி கொடுத்ததாகவே குற்றம்சாட்டுகிறார். அதைவிட, ஊழலில் பணம் பெற்றால்கூட அதனை எந்தக் கொம்பனாலும் நிரூபிக்க முடியாது. மஹிந்த ராஜாபக்ஷ முதல் தடவையாக ஆட்சியில் இருந்து வெளியேறிய போது பல கோடி ரூபாய்களை ஊழல் செய்தாரெனக் குற்றம் சாட்டப்பட்டது. ஆனால், அவர் ஆட்சியிலிருந்து வெளியேற் றப்பட்ட பின்னர், இதனை நிரூபிக்க முடியவில்லை என்பதற்காக அவர் ஊழல் செய்யவில்லை என்று யாரும் இன்று வரை நம்பவில்லை.

மணிவண்ணன் ஒரு வளர்ந்துவரும் அரசியல் தலைவர். பல ருக்கு தன்மீது நம்பிக்கையை ஏற்படுத்தியவர். தன்னை - தனது தூய்மையை வெளிப்படுத்தவேண்டியது கட்டாயமானது.!

**- ஊர்க்குருவி**

## வவுனியா மாவட்ட புதிய அரச அதிபராக சரத்!

வவுனியா, ஓக. 27

வவுனியா மாவட்டத்தின் புதிய அரச அதிபராக பௌத்த சாசன அமைச்சில் உயர் அதி காரியாக பணியாற்றிய சரத் சந்திர நியமிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா மாவட்ட அரச அதிபராகப் பணியாற்றிய சமன் பந்துலசேன வடக்கு மாகாண பிரதம செயலாளராக நியமிக் கப்பட்டார். இதையடுத்து அரச அதிபர் பதவி வறிதானது.

இதையடுத்து அவரின் இடத்துக்கு தற்போது புதியவ ரான சரத் சந்திர நியமிக்கப்பட் டுள்ளார். இவர் இன்று வெள் ளிக்கிழமை பதவியைப் பொறுப்பேற்பார் என்றும் தெரி விக்கப்பட்டது. (ஐ)

## ஐ.தே. கட்சியின் கொள்கை திட்டம் செப். 5இல் வெளியீடு

கொழும்பு, ஓக. 27

ஐக்கிய தேசிய கட்சியின் எதிர்கால அரசியல் கொள்கைத் திட்டம் செப்ரெம்பர் 5 ஆம் திகதி வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் 75 ஆவது சம் மேளனம் எதிர்வரும் செப். 06 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், எதிர்கால அரசியல் கொள்கைத் திட்டம் வெளியி டப்படவுள்ளது.

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டின் அனைத்து பகுதி களையும் உள்ளிடக்கிய கட்சி ஆதரவாளர்களுடன் எதிர்வரும் 5ஆம் திகதி ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மெய்நிகர் வழி ஊடாக கொள்கை திட்டத்தை வெளியிட்டு உரையாற்றவுள் ளார்.

இதன்போது கட்சியின் மறுசீரமைப்பு மற்றும் பிரசார நடவடிக்கைகள் குறித்து அன் றைய தினம் அறிவிக்கப்பட வுள்ளதாக தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

கொரோனா அச்சுறுத்தல் களை கருத்தில் கொண்டு ஆதரவாளர்களுடனான நேரடி சந்திப்புகள் தவிர்க்கப்பட்டுள்ள தாகவும் அவர் குறிப்பிட்டார். அத்துடன், ஐக்கிய தேசிய கட்சியின் மறுசீரமைப்பு திட்ட வரைபுக்கு தலைவர் ரணில் விக்கிரமசிங்க அனுமதி வழங்கி யுள்ள நிலையில், மத்திய செயல் குழு ஊடாக நடைமுறைப் படுத்தப்படும் - என்றார். (ஐ)

## நயினாதீவில் மூவருக்கு தொற்று

யாழ்ப்பாணம், ஓக. 27

நயினாதீவில், மரண சடங் கில் கலந்துகொண்ட மூவருக்கு கொரோனோ தொற்று உறுதி யாகியுள்ளது.

நயினாதீவில், கடந்த திங் கட்கிழமை வயோதிப பெண் மணி ஒருவர், திடீரென ஏற் பட்ட சுகவீனத்தால் உயிரிழந் தார்.

அவரின் மரண சடங்கில் ஊரவர்கள் கலந்துகொண்டி ருந்தனர். இந்நிலையில் ஓரிரு நாள்களில் உயிரிழந்தவரின் சகோதரி உள்ளிட்ட சிலருக்கு திடீர் உடல்நல குறை ஏற்பட் டுள்ளது.

இதையடுத்து, அவர்கள் வைத்தியசாலைக்கு சிகிச்சைக் கென சென்றனர். அவர்களின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோ தனைக்கு உட்படுத்தப்பட்ட போது மூவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதையடுத்து மரண சடங் கில் பங்கேற்றோரை தனிமைப் படுத்த சுகாதாரப் பகுதியினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

கல்வி TV CHANNEL-1

**27.07.2021**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறுஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

கல்வி TV CHANNEL - 2

**27.07.2021**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | சிங்களம் |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

Eelanadu ஈழநாடு
27.08.2021 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 11

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

# ‘ஹேமாஸ் போயின்’ மறைவு

தென்னிலங்கையின் மூத்த அரசியல்வாதிகளில் ஒருவரும், முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான மங்கள சமரவீர அண்மையில் கொரோனாவினால் மரணமுற்றார். அவரின் மறைவிற்கு வேறுபட்ட அரசியல் கட்சிகளை சேர்ந்த பலரும் இரங்கல் தெரிவித்திருந்தனர். பொதுவாக ஓர் அரசியல் தலைவர் மறைகின்றபோது, பலரும் இரங்கல் தெரிவிப்பது சம்பிரதாயபூர்வமான ஒன்றுதான். டி. எஸ். சேனநாயக்க காலமானபோது, அவருக்கு பாரளுமன்றத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது. பலரும் அவரை புகழ்ந்து பேசிக் கொண்டிருந்த வேளையில், ஒரு பாராளுமன்ற உறுப்பினர் மட்டும், சற்று மாறுபட்ட வகையில், இறந்துவிட்டால் கசாப்புக் கடைக்காரனும் போதி சத்துவன் ஆகிவிடுகின்றான் என்று குறிப்பிட்டிருந்தார். இறந்த பின்னர் பொதுவாகவே ஒருவரைப் புகழ்ந்து பேசுவதுதான் வழக்கமான ஒன்று.

மங்கள சமரவீரவின் மறைவிற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் உட்பட ஏனைய பலரும் இரங்கல் தெரிவித்திருக்கின்றனர். மங்களவின் இடத்தை வேறு எவராலும் நிரப்ப முடியாது என சம்பந்தன் குறிப்பிட்டிருக்கின்றார். மங்களவிற்கு இரங்கல் தெரிவிப்பதை தமிழ்ச் சூழலிலுள்ள சிலரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. மங்களவும் ஏனைய சிங்கள அரசியல்வாதிகள் போன்ற ஒருவர்தான். அவரை வேறுபடுத்தி நோக்க வேண்டியதில்லை என்பது அவ்வாறானவர்களின் வாதம். மங்கள சமரவீரவிற்கு அமெரிக்க ஜனாதிபதியின் ஆலோசகர்களில் ஒருவரும், அமெரிக்க உதவி நிறுவனத்தின் (USAID) நிர்வாகியுமான சமந்தா பவர், இரங்கல் தெரிவித்திருந்தார். மங்களவின் மறைவு தனக்கு மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்துவதாகத் தெரிவித்திருக்கின்றார். இதிலிருந்து மங்கள அமெரிக்காவிற்கு நெருக்கமான ஒருவராக இருந்தவர் என்பது வெள்ளிடைமலை.


இனவாத முகாம்களுடன் இணைந்திருந்தாலும்கூட, மங்கள அரசியல் ரீதியாக தாராளவாத சிந்தனைகளுக்கு ஆதரவான ஒருவராகவே இருந்தார். இதன் காரணமாகவே அவரால் அமெரிக்கா மற்றும் மேற்குலக அரசியல் தரப்பினருடன் தொடர்புகொள்ள முடிந்தது. 2015இல் இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தை திட்டமிட்டவர்களில் மங்கள முக்கியமானவர். குடும்ப ரீதியாக சிறீலங்கா சுதந்திரக் கட்சிப் பாரம்பரியத்தை சேர்ந்தவரான மங்கள, 1989இல் மாத்தறை மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவானார். சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தில் அவருக்கு மிகவும் நெருக்கமானவராக இருந்தார். பின்னர் சந்திரிகாவுடன் முரண்பட்டுக் கொண்டு, மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு தெரிவித்திருந்தார். 2005இல், மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்கு மங்கள பிரதானமான பங்களிப்பை வழங்கியிருந்தார். பின்னர் மஹிந்தவுடன் ஏற்பட்ட முரண்பாடுகளை தொடர்ந்து, ரணில் விக்கிரமசிங்க தலைமை யிலான ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொண்டார். மங்களவின் மறைவு, தனக்கும் தனது கட்சிக்கும் பேரிழப்பு என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார்.

2019இல் மங்கள தனது அரசியல் வாழ்கை வரலாற்றை ஹேமாஸ் பையன் (Khema’s Boy) என்னும் பெயரில் வெளியிட்டிருந்தார். ஹேமா என்பது அவரின் தாயாரின் பெயர். இந்த நூல் வெளியீட்டில் அப்போது அதிகாரத்தில் இல்லாத சமந்தா பவர் பிரதம அதிதியாகப் பங்கு கொண்டிருந்தார். மங்களவின் அரசியல் வாழ்க்கை கௌரவம், நவீனத்துவம், ஜனநாயகம் என்னும் தலைப்பில் சமந்தா பேசியிருந்தார்.

மங்கள சமரவீர, தனது வாழ்க்கையை ஓர் அலங்கார வடிமைப்பளராக (fashion designer) ஆரம்பித்திருந்தார். பின்னர் ஒரு புகைப்படப்பிடிப்பாளராக செயல்பட்டிருந்தார். மங்கள அடிப்படையிலேயே மேற்குலக நாகரிகத்தின் காதலர். இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒருவர் தனது பாலியல் ஆர்வத்தை வெளிப்படையாக கூறினார் என்றால் அது மங்கள மட்டும்தான். அவர் ஓரினச் சேர்க்கையில் ஈடுபாடானவர். இதன் காரணமாக மங்களவை சிங்கள - பௌத்த தேசியவாதிகளுக்கு அடிப்படையிலேயே பிடிப்பதில்லை. இதற்கு அவரின் வாழ்க்கை முறையே காரணம். எனினும், மங்களவின் திறமைகள் தேவைப்பட்டதால் அவரை விரும்பியோ, விரும்பாமலோ ஏற்றுக் கொண்டனர்.

மங்கள தமிழ் மக்களுக்கு ஆதரவாக இருந்தவரா என்னும் கேள்விக்கு ஆம் என்றும் சொல்லலாம். ஆனால், தமிழ்த் தேசியத்திற்கு ஆதரவாக இருந்தவரா என்றால் நிச்சயமாக இல்லை. தமிழ்த் தேசியம் என்பதை தென்னிலங்கை எப்போதுமே விடுதலைப் புலிகளுக்கு ஊடாக மட்டுமே பார்க்கப் பழகியிருந்தது. மங்களவின் மறைவு யாருக்கெல்லாம் இழப்பு என்பதற்கு அப்பால், ராஜபக்ஷக்களை பொறுத்தவரையில் அவர்களின் எதிர்கால அரசியலில் மிகவும் சவாலாக இருக்கக்கூடிய ஒருவர் தற்போது தென்னிலங்கை அரசியல் அரங்கில் இல்லை.

# பிள்ளைகள் உங்கள் பேச்சை கேட்பதில்லையா?



பெற்றோரை மதிப்பதிலும், சொல் பேச்சு கேட்பதிலும் தலைமுறைக்கு தலைமுறை வேறுபடுகிறது. அதிலும் தற்போதைய தலைமுறை பிள்ளைகளுக்கு பெற்றோர் சொல்வதைக் காது கொடுத்து கேட்கவே பிடிப்பதில்லை.

முதலில் பெற்றோர் என்ன சொல்கிறார்கள் என்று காது கொடுத்துக் கேட்டால்தானே, அதைச் செய்வதா? வேண்டாமா? அவர்கள் சொல்வது யார் நல்லதுக்கு என்றெல்லாம் புரியும். பெற்றோர் பேச ஆரம்பித்ததுமே பல பிள்ளைகள் தங்கள் காதுகளுக்குப் பூட்டுப் போட்டு விடுகிறார்களே. வாய் அசைவை வைத்து என்னதான் புரிந்து கொள்ள முடியும் சொல்லுங்கள்?

சரி பிள்ளைகள் நமது பேச்சைக் கேட்காமல் போவதற்கு யார் காரணம்? அவர்களா? இல்லை பெற்றோரா? பெரும்பாலும் இதில் பெற்றோருக்குத்தான் பெரும்பங்கு.

முதலில் குழந்தைகள் உங்கள் பேச்சைக் கேட்காமல் போவதற்குக் காரணம் என்னவென்று பார்க்கலாம்.

குழந்தைகள் பிறந்தது முதலே, அதற்கு என்ன புரியும் என்று கேட்க வேண்டாம். புரிகிறதோ இல்லையோ, குழந்தைகளிடம் பேசுவதை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். சின்ன சின்ன நகைச்சுவைகளைச் சொல்லி சிரிப்பது, உறங்கும் போது கதைகள் சொல்வது மிகவும் அவசியம். இதுதான் நாம் பேசுவதை அவர்கள் கேட்கும் பழக்கத்தை முதலில் ஏற்படுத்துகிறது. ஆரம்பத்திலேயே இதைச் செய்ய தவறிவிட்ட பெற்றோர், இனி தலைகீழாக நின்றாலும் நமது பிள்ளைகள் நமது பேச்சைக் கேட்பார்கள் என்று முயற்சிப்பது வீண் வேலை. அவர்கள் சொல்வதை கேட்டுக் கொள்வது சாலச் சிறந்தது.

அதெல்லாம் குழந்தையாக இருந்த போது கேட்டார்கள். இப்போதுதான் பிரச்னையே என்பவர்கள். கீழ்கண்டவற்றை நீங்கள் செய்கிறீர்களா என்று பாருங்கள்...

எப்போதும் பிள்ளைகளிடம் கோபமாகப் பேசுவது. பிள்ளைகளின் குறைகளை அடிக்கடி சுட்டிக்காட்டுவது. பிள்ளைகள் எதைச் செய்தாலும் அப்படி செய்யாதே, இப்படி செய்யாதே என்று கடிந்து கொள்வது. அவர்கள் ஏதேனும் பொழுதுபோக்காக விளையாடிக் கொண்டிருக்கும் போது அவர்களை அழைத்து அறிவுரை கூறுவது.

அவர்களாக உங்களிடம் பேச வரும்போது வேறு ஏதேனும் வேலையில் கவனம் செலுத்துவது. நண்பர்கள் முன்னிலையில் திட்டுவது.

அவர்களின் பேச்சை காது கொடுத்து கேட்காமல் விட்டுவிடுவது. ஓர் அறிவுரையை சின்னதாகச் சொல்லாமல், நீட்டி முழக்கிக் கூறுவது.

ஒரு தவறு செய்துவிட்டால் அதையே நாள் முழுக்கச் சொல்லிக் காட்டுவது. அவர்களுக்கு மிகவும் பிடித்த ஒன்றை செய்யவேக் கூடாது என்று வலியுறுத்துவது.. போன்றவை, இந்தத் தலைமுறை பிள்ளைகளை பெற்றோரிடமிருந்து வெகு தொலைவுக்குக் கொண்டு சென்றுவிடுகின்றன.

சரி என்னதான் செய்ய வேண்டும் அவர்கள் நமது பேச்சைக் கேட்க என்றால்.

அவர்கள் தவறு செய்தாலும் அப்போது அது குறித்து திட்டாமல் விடுவது அல்லது மன்னித்து விடுவதாகக் கூறுவது. கைபேசியை எப்போதும் கையில் வைத்திருப்பது குறித்து அவர்களை கடிந்து கொள்ளாமல், அதைக் குறைக்க வேறு வழிகளை நீங்களே கண்டடைதல். அவர்களுக்கு ஓவியம் வரைதல், தோட்டம் அமைத்தல், வீட்டை சுத்தம் செய்தல் போன்ற வேலைகளில் ஆர்வமிருந்தால், அதற்குப் பழக்கப்படுத்தலாம்.

தற்போது வீட்டிலிருக்கும் பிள்ளைகள், சமையலில் ஆர்வத்துடன் இருக்கிறார்கள். அதையும் செய்யப் பழக்கலாம்.

அவர்களுக்குப் பிடித்த விஷயத்தைப் பற்றி பேச ஆரம்பித்து, அந்தப் பேச்சு சுவாரஸ்யமாகச் சென்று கொண்டிருக்கும் போது, அவர்களிடம் நீங்கள் சொல்ல விரும்பும் விஷயங்களைச் சொல்லலாம். அப்போது அவர்கள் அதைக் காதுகொடுத்துக் கேட்க வாய்ப்பிருக்கிறது.

ஓர் அறிவுரை என்றால் அதை ஒரே வாக்கியத்தில் முடித்துவிடுங்கள்.

நீங்கள் அறிவுரை கூறும்போது சரி, செய்கிறேன் என்று அவர்கள் சொல்லிவிட்டால், அந்த அறிவுரையை அத்தோடு நிறுத்தி விடுங்கள். அதற்கு மேல் அதைத் தாங்க முடியாது என்பதே அந்த சரி, செய்கிறேன் என்பதன் அர்த்தம். ஒரு விஷயத்தை நீங்கள் சொல்ல வேண்டும் என்றால், அது குறித்து யூ-ரியூப்பில் ஏதேனும் காணொலி வந்திருக்கிறதா என்று பாருங்கள். அதை அவர்களுக்கு அனுப்பி பார்க்க வைக்கலாம். (அடிக்கடி தண்ணி குடிக்க வேண்டும் என்பது முதல்) எதையும் நாம் சொல்வதை விட, இப்படி தெரிந்து கொண்டு பின்பற்றுவதற்கு பிள்ளைகள் விரும்புகிறார்கள். (வேறு வழியில்லை)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**ஓகஸ்ட் - 27 வெள்ளிக்கிழமை**
பிலவ வருடம் - ஆவணி 11
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : பஞ்சமி




**மேடம்**
வருமானம் உயரும். வருங்காலத் திட்டங்கள் நிறைவேறும். பொறுப்பு ஒன்று தேடி வரும். சொந்த ஊரில் மதிக்கப்படுவீர்கள். மூத்த சகோதர, சகோதரிகளுடன் இருந்த மனஸ்தாபம் நீங்கும்.

**இடபம்**
தரகு வகைகளால் திடீர்ப் பணம் வரும். சகோதர உறவுகளுடன் இருந்த மனவருத்தம் நீங்கும். ஆடம்பரச் செலவுகள் குறையும். கல கலப்பான நாள்.

**மிதுனம்**
சேமிக்கத் தொடங்குவீர்கள். பயம் தீரும். உறவினர் வீட்டு விசேஷங்களில் கலந்து கொள்வீர்கள். அநாவசியக் காரணங்களுக்காக ஆதங்கப்படுவீர்கள்.

**கடகம்**
குழப்பம் மிகும். தொழில் சிறக்கும். பேராசைகள் வேண்டாம். உங்களின் தனித்திறமையால் பாராட்டு பெறுவீர்கள். பதவி, சம்பள உயர்வு பற்றி பதற்றம் வேண்டாம்.

**சிம்மம்**
முடிந்த வரை செலவுகளை குறைத்து சேமிப்பீர்கள். எந்த விஷயத்திலும் கவனமும் நிதானமும் தேவை. தேவையற்ற, நியாயமற்ற வாக்குவாதம் வேண்டாம்.

**கன்னி**
திடீர் பணவரவு உண்டு. சொத்தை அடைவதில் அவசரம் வேண்டாம். எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம். சுப நிகழ்ச்சி இருக்கும். நண்பர்களால் உங்களுக்கு நன்மை உண்டு. பயம் தீரும்.

**துலாம்**
பிரச்னையை திறம்பட சமாளிப்பீர்கள். நன்மை உண்டாகும். கடந்த சில நாளாக இருந்து வந்த மன அழுத்தம் நீங்கும். குழந்தைகளுடன் மகிழ்ச்சியாக பொழுதை கழிப்பீர்கள்.

**விருட்சிகம்**
தெய்வ வழிபாடு செய்து மனதில் அமைதி காண்பீர்கள். பணத்தட்டுப்பாடு சற்றே நீங்கும். சந்தோஷம் தலைகாட்டும். சிறு சிறு பிரச்னைகள் நீங்கும். பணியில் கவனம் செல்லும்.

**தனுசு**
வாழ்க்கைத் துணையுடன் மகிழ்ச்சியான தருணம் உண்டு. உங்களின் செயல், பேச்சால் பிரச்னை வராதபடி கவனம் தேவை. செயல்களில் கவனம். யாருக்கும் வாக்குத்தர வேண்டாம்.

**மகரம்**
பிணை பத்திரத்தில் கையெழுத்திட வேண்டாம். உங்கள் பேச்சு, செயலில் கவனம் தேவை. அமைதியான நாள். கடன் அனுமதி கிடைக்கும். வெளியூர் செல்ல ஏற்பாடாகும்.

**கும்பம்**
பிறரின் தவறுக்கு நீங்கள் ஆளாகாதபடி கவனம் தேவை. சேமிப்பு கைகொடுப்பதால் நிம்மதி ஏற்படும். தீய நட்பு வேண்டாம். வீண் பேச்சு வேண்டாம். பிரச்னைகளை சமாளிப்பீர்கள்.

**மீனம்**
மகிழ்ச்சியுடன் புதிய வீடு, மனை வாங்க வாய்ப்பு உண்டு. திட்டமிட்ட விஷயங்களில் சிறு சிறு மாற்றங்கள் நடக்கும். தகுதி அறிந்து நட்புக்கொள்வது எதிர்கால சிக்கலைக் குறைக்கும்.

# கொடநாடு கொலை வழக்கு தொடர்பில் சசிகலா இல்லத்தில் முக்கிய ஆலோசனை



சென்னை, ஓக. 27

கொடநாடு கொலை, கொள்ளை வழக்கு தமிழக அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் கொடநாடு எஸ்டேட் பற்றிய முழு விவரங்கள் அறிந்த சசிகலா, இது தொடர்பாக தீவிரமாக ஆலோசனை செய்து வருகிறார் என தகவல்கள் வெளியாகியுள்ளன. இதன் மூலம் மற்றோர் அரசியல் நகர்வுக்கு அவர் தயாராகிவருகிறாரென சொல்லப்படுகின்றது.

சசிகலா தனது குடும்பத்தைச் சேர்ந்த தினகரன், இளவரசி, நடராஜன் சகோதரர், வழக்கறிஞர், விவேக் போன்ற அவருக்கு நம்பிக்கையானவர்களுடன் நேற்று முன்தினம் இரவு 2.00 மணி வரையில், கொடநாடு வழக்கு சம்பந்தமாக ஆலோசனைகள் செய்திருக்கிறார். கொடநாடு எஸ்டேட்டில் ஜெயலலிதாவோடு தங்கியிருந்தவர் என்ற அடிப்படையில் அந்த எஸ்டேட் பற்றிய முழு விவரங்களும், சம்பவத்தில் கொள்ளை போன ஆவணங்கள் என்னென்ன என்பது பற்றியும் சசிகலாவுக்கே தெரியும்.

அந்த ஆலோசனை முடிவில் கொடநாடு எஸ்டேட்டில் நடந்த கொலை, கொள்ளையைப் பற்றி ஜெயா டி.வி.யில் சிறப்பு பேட்டி கொடுக்கவும் தயாராகிறார் சசிகலா. அந்த பேட்டியில் சசிகலா வெளியிடும் தகவல்களால் கொடநாடு வழக்கு கூடுதல் வலுவடையும் என்கிறார்கள் சசிகலா வட்டாரத்தில்.

# தமிழகத்தில் 2.75 கோடி பேருக்கு கொரோனா தடுப்பூசி போடப்பட்டது



சென்னை, ஓக. 27

தமிழகத்தில் கொரோனா தடுப்பூசி போட்டோரின் எண்ணிக்கை 2 கோடி 75 இலட்சத்தை தாண்டியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தவகையில் 60 வயதுக்கு மேற்பட்ட 44 இலட்சத்து 55 ஆயிரத்து 26 பேருக்கும், 45 முதல் 60 வயதுக்கு உட்பட்ட 88 இலட்சத்து 24 ஆயிரத்து 319 பேருக்கும், 18 வயது முதல் 44 வயதுக்கு உட்பட்ட 1 கோடியே 22 இலட்சத்து 38 ஆயிரத்து 153 பேருக்கும் கொரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும் 3 இலட்சத்து 71 ஆயிரத்து 804 பேர் தடுப்பூசி போட்டுள்ளனர். அந்த வகையில் இதுவரை மொத்தம் தமிழகத்தில் 2 கோடியே 75 இலட்சத்து 66 ஆயிரத்து 581 பேருக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# காவிரி மேலாண்மை ஆணைய கூட்டத்தில் மேகதாது அணை குறித்து விவாதிக்கக்கூடாது

## ராமதாஸ் வலியுறுத்துகின்றார்



சென்னை, ஓக. 27

மேகதாது அணை தொடர்பாக, காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் விவாதிக்கக் கூடாது எனவும், திட்ட அறிக்கையைத் திருப்பி அனுப்ப வேண்டும் எனவும், பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக, ராமதாஸ் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது

“காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது என்ற இடத்தில் அணை கட்டுவதற்கு அனுமதி அளிப்பது குறித்து, காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் அடுத்த கூட்டத்தில் விவாதிக்க ஏற்பாடு செய்வதாக, மத்திய நீர்வளத்துறை அமைச்சர் கஜேந்திர ஷெகாவத் உறுதியளித்திருப்பதாக, கர்நாடக முதல்வர் பசவராஜ் பொம்மை தெரிவித்திருக்கிறார். இந்தத் தகவல் உண்மையாக இருந்தால் அது கண்டிக்கத்தக்கது.

தமிழகத்தின் ஒப்புதல் இல்லாமல் மேகதாது அணைக்கான விரிவான திட்ட அறிக்கை குறித்து, காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தில் விவாதிப்பது சாத்தியமே இல்லை என்னும் சூழலில், இத்தகைய வாக்குறுதியை மத்திய நீர்வளத்துறை அமைச்சர் அளித்திருப்பது தவறு அதை ஏற்க முடியாது” என ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

# சர்ச்சையை ஏற்படுத்திய காணொலி விவகாரம்: மதன் ரவிச்சந்திரன் பா.ஜ.கவில் இருந்து நீக்கம்

சென்னை, ஓக. 27

பா.ஜ.க. பிரமுகர் கே.டி.ராகவன் மீது பாலியல் குற்றச்சாட்டு சுமத்தி சர்ச்சைக்குரிய காணொலி வெளியிட்ட விவகாரத்தில், மதன் ரவிச்சந்திரன் கட்சியில் இருந்து நீக்கப்பட்டு உள்ளார்.

இது தொடர்பாக தமிழக பா.ஜ.க. மாநில பொதுச்செயலாளர் கரு.நாகராஜன் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:-

“பத்திரிகையாளர் மதன் ரவிச்சந்திரன் மற்றும் வெண்பா ஆகியோர் தமிழக பா.ஜ.க. மாநில தலைவர் கே.அண்ணாமலையை சந்தித்து, பா.ஜ.க.வின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள நடவடிக்கை குழுவுக்கு ஒத்துழைப்பு கொடுப்பதாக உறுதி அளித்துள்ளனர்.

அதேவேளையில் பா.ஜ.கவின் கொள்கைகளுக்கு முரணாக காணொலி பதிவில் கருத்துக்கள் தெரிவித்துள்ள மதன் ரவிச்சந்திரன் மற்றும் வெண்பா ஆகியோர் கட்சியின் அடிப்படை உறுப்பினரில் இருந்து நீக்கப்படுகிறார்கள். ஆகவே கட்சியின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள், அவர்களிடம் கட்சி சார்பாக எந்தவித தொடர்பும் வைத்துக் கொள்ள வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறது” என அதில் கூறப்பட்டு உள்ளது.

# நாட்டை மேலும் 2 வாரங்கள் மூடுவதே பொருத்தமானது!



**கொழும்பு,ஓக.26**

**கோவிட்-19 தொற்றுநோய் பரவுவதைக் கட்டுப் படுத்த சுகாதார அறிவுறுத்தல்களின்படி நாட்டை மேலும் இரண்டு வாரங்களுக்கு மூடுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர், பாராளுமன்ற உறுப் பினர் ரணில் விக்கிரமசிங்க அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

தினசரி பதிவாகும் நோய்த் தொற்றாளர்கள் மற்றும் உயிரி ழப்புகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக நாட்டை முடக்குவதன் மூலம் மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்ரமசிங்க நேற்று சமூக ஊடகங்களில் சிறப்பு அறிக்கையை வெளியிட்டார்.

அத்தகைய மூடலின்போது நாடு எதிர்கொள்ளும் பொரு ளாதார நெருக்கடிக்கான தீர்வு கள் குறித்தும் தனது கருத்துக்க ளை அவர் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்து டன் பேச்சு நடத்தவும் அவர் அரசிடம் கேட்டுக்கொண்டார்.

# சதொசவில் சீனிக்கு தட்டுப்பாடு!

வவுனியா, ஓக. 27

வவுனியா நகரில் அமைந் துள்ள சதொச விற்பனை நிலை யத்தில் சீனியை கொள்வனவு செய்யச் செல்பவர்கள் ஏமாற் றத்துடன் திரும்பவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சீனிக்கான விலை அதிகரிக் கப்பட்டுள்ள நிலையில் வவுனி யாவில் அமைந்துள்ள மொத்த வியாபார நிலையங்களில் ஒரு கிலோ சீனி 205 முதல் 215 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. அதனை கொள்வ னவு செய்யும் உள்ளூர் வர்த்த கர்கள் 225 ரூபாய் முதல் 240 ரூபாய் வரை பொதுமக்களுக்கு விற்பனை செய்துவருகின்றனர்.

ஆயினும் சதொச விற்பனை நிலையத்தில் ஒரு கிலோ சீனி யின் விலை 120 ரூபாய்க்கு விற் பனை செய்யப்படுகின்றது. இதனால் அதிகளவான மக்கள் சீனியைக் கொள்வனவு செய்வ தற்காக அங்கு செல்லும் நிலையில் சீனிஇல்லை என்று அங்கு தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் பொதுமக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதுடன், அதிக விலைக்கு உள்ளூர் கடைகளில் சீனியைக் கொள்வனவு செய்கின்றனர்.

எனவே, சதொச விற்பனை நிலையமூடாக தட்டுப்பாடின்றி பொதுமக்களுக்கு சீனியை விற்பனை செய்வதற்கான நடவடிக்கையை அரசு முன்னெ டுப்பதுடன்,மொத்த மற்றும் உள்ளூர் வியாபாரிகளும் நியாயமான விலையில் சீனியை விற்பனை செய்வதற்கு நட வடிக்கை எடுக்கவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





# 139 கிலோ கிராம் கஞ்சாவுடன் நேற்று பருத்தித்துறை கடலில் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 27

இந்தியாவிலிருந்து படகு ஒன்றில் யாழ்ப்பாணத்துக்கு கடத்தி வரப்பட்ட 139 கிலோ கிராம் கஞ்சா போதைப்பொரு ளுடன் இருவர் கைது செய்யப் பட்டுள்ளனர் என்று கடற்படை யினர் தெரிவித்தனர்.

பருத்தித்துறை கடற்பரப் பில் நேற்று காலை 6 மணிக்கு இந்த கைது நடவடிக்கை முன் னெடுக்கப்பட்டதாக கடற் படை தெரிவித்துள்ளது.

பருத்தித்துறை கடற்பரப் பில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, சந் தேகத்துக்கிடமான படகு ஒன்றை சோதனையிட்டனர். இதன்போது அதில் கஞ்சா போதைப்பொருள் கடத்தி வரப்பட்டமை கண்டறியப்பட் டது.

கடற்படையினரின் படகைக் கண்டவுடன் சந்தேக நபர்கள் கஞ்சா போதைப்பொருள் பொதிகளை கடலில் வீசிவிட்ட னர். அவை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

அவற்றைக் கடத்தி வந்த பருத்தித்துறை தும்பளை மற் றும் கொட்டடியைச் சேர்ந்த 22, 26 வயதுடைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட் டனர்.

கஞ்சா போதைப்பொருளின் பெறுமதி 4 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது என்று கடற்படையினர் கூறினர்.

சந்தேக நபர்கள் பருத்தித் துறை பொலிஸாரிடம் ஒப்ப டைக்கப்பட்டுள்ளனர்.

(அ-02)

# பொலிஸ் பொறுப்பதிகாரி உள்ளிட்ட 10 பேருக்கு கலவானவில் கொரோனா!

கொழும்பு, ஓக. 27

கலவான பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட 10 பொலிஸ் உத்தியோகத்தர் களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அந்த பொலிஸ் நிலைய அதி காரி ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட தையடுத்து ஏனையவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின்போதே பொலிஸ் பரிசோதகர், உப பொலிஸ் பரிசோதகர் அடங் கலாக 10 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக கலவான சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.







# மகாறம்பைக்குளத்தில் நேற்று நடமாடும் தடுப்பூசி திட்டம்!

வவுனியா, ஓக. 27

வவுனியாவில் நடமாடும் தடுப்பூசி திட்டம் கடந்த நான்கு நாட்களாக இராணுவத்தின ரால் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றது.

இதன் தொடர்ச்சியாக நேற்று மகாறம்பைக்குளத்தில் வசிக்கும் 60 வயதிற்கு மேற்பட் டோருக்கு அஸ்ராசெனகா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன.

அங்குள்ள மதுரைவீரன் ஆலயத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில் இராணுவ உயர் அதிகாரிகள், இராணுவத்தினர், வயோதிபர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை வவுனியா மாவட்டத்தில் நேற்று முன் தினம் 6 மாத சிசு மற்றும் பெண்மணி உட்பட இந்த வருடம் 51 மரணங்கள் நிகழ்ந் தன. 3, 759 பேர் தொற்றுக்கு உள்ளானமை குறிப்பிடத்தக்கது.

# பொருட்கள் விலை உயர்வால் வடக்கில் மக்கள் பெரும் அவதி!

மன்னார், ஓக. 27

பொருட்களின் விலை உயர் வால் மூன்று மாவட்டங்களில் மக்கள் அவதிப்படுகின்றனரென வர்த் தக அமைச்சர் பந்துல குண வர்த்தனவுக்கு வன்னிப் பாராளு மன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கடித மொன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:

அத்தியாவசியப் பொருள் களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையில் அல்லது கட்டுப் பாட்டு விலையில் எந்தப் பொருட்களையும் பெற முடி யாத சூழ்நிலை என் தேர்தல் மாவட்டங்களான மன்னார், வவுனியா மற்றும் முல்லைத் தீவில் உள்ளது.

ஏழைகளின் உணவுப் பொருள்களாகக் கருதப்படும் அனைத்து அத்தியாவசியப் பொருள்களும் கட்டுப்பாட்டு விலைக்கு மேல் விற்கப்படுகின் றன.

இந்த விவகாரத்தை ஆராய எந்த அரச அதிகாரிகளும் முன் வருவதாக தெரியவில்லை. பொருட்களின் விலை அரசாங் கத்தினால் நிர்ணயிக்கப்பட்டி ருந்தும் கூட நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மாறுபட்டு கூடிய விலையில் பொருள்கள் யாவும் விற்கப்படுகின்றன.

அரசு விதித்த கட்டுப்பாட்டு நிர்ணய விலை பொருந்தாததாக இங்கு காணப்படுகிறது. இதற்கு காரணம் அரச அதிகாரிகளின் அசமந்தப்போக்கு என்றே கூற வேண்டும். மக்கள் எவ்வளவு கடினமாக உழைத்தாலும் தங் கள் வாழ்க்கையை முன்னெடுத் துச் செல்ல முடியாத சூழ் நிலையே இங்கு காணப்படுகிறது.

எனவே, இவ் விடயத்தினை கவனத்தில் இருத்தி இந்த மக் களின் அவதி நிலையினை போக்க உரிய நடவடிக்கை எடுக்க முன்வருமாறு கேட்டுக் கொள்கிறேன் - என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

# வவுனியா பிரதேச செயலகத்தின் காணிக்கிளை மூடப்பட்டது

வவுனியா, ஓக. 27

வவுனியா பிரதேச செயலகத் தின் காணிக்கிளை நேற்றிலி ருந்து எதிர்வரும் 10 ஆம் திகதிவரை மூடப்பட்டுள்ளது.

அந்த கிளையில் பணிபுரி யும் ஊழியர் ஒருவருக்கு கோவிட்-19 தொற்று உறுதிப் படுத்தப்பட்ட நிலையில் குறித்த சேவைகள் இடைநிறுத் தப்பட்டுள்ளனவென பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

# 2,000 ரூபாய் உதவி கிடைக்காதவர்கள் பிரதேச செயலரிடம் முறையிடலாம்

கொழும்பு, ஓக. 27

தனிமைப்படுத்தல் ஊரடங்கு காரணமாக அரசி னால் வழங்கப்படும் 2 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை பெறாத குடும்பங்கள் பிரதேச செயலாள ரிடம் மேல்முறைபீடு செய்யலாம் என்று அறிவிக் கப்பட்டுள்ளது.

பொருளாதார புத்துயிர் மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணி ஊடாக இந்த உதவித் தொகை நாடுமுழுவதும் வழங்கப்படுகிறது.

உதவித்தொகை விநியோகம் முடிவடைந்த பகுதிகளில் வசிக்கும் நபர்கள், வருமான ஆதா ரத்தை இழந்திருந்தும் உதவித் தொகை கிடைக்க வில்லை என்றால் பிரதேச செயலாளரிடம் முறையிடலாம்.

ஈழநாடு



# மக்களை வீடுகளுக்கு வெளியேவிட்டு நாட்டை முடக்கியுள்ளது அரசாங்கம்!

## அரசு மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்க தலைவர் குற்றச்சாட்டு




கொழும்பு, ஓக.27

**மக்களை வீடுகளுக்கு உள்ளே வைத்து அல்ல, வீடுகளுக்கு வெளியே வைத்தே அரசாங்கம் நாட்டை முடக்கியுள்ளது என அரசு மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.**

கொழும்பில், நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கோவிட் -19 தொற்றை கண்டறி அறிவியல் ரீதியாக முன்னெடுக்கப்பட்ட சோதனைகளை அதிகரிக்குமாறு கோரினால், தற்போது சோதனைகளை குறைத்துவிட்டனர். சோதனைக்கு மாதிரிகள் எடுக்க வழி இல்லாததால் சோதனைகள் குறைக்கப்படுகின்றன என

கோவிட்-19 செயலணியின் பிரதானியான இராணுவத்தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். இது யானையை வைத்துக்கொண்டு, அங்குசம் இல்லாமையால், அவ்வேலையை கைவிடுவதாக கூறுவதைப் போலுள்ளது.

சுகாதார அமைச்சின் வழிகாட்டல்கள் போலியாகியுள்ளது. அந்த அமைச்சின் ஊடாக பரிசோதனைகளை முன்னெடுப்பதற்கான ஓர் ஏகபோகத்தை உருவாக்கியுள்ளனர்.

முக்கிய சாலைகளை கண்காணிக்கும்போது, அதிகமான மக்கள் வெளியில் இருப்பதும் வழக்கம் போல் தங்கள் வேலையை மேற்கொள்வதும் தெளிவாகிறது.

அடிப்படைத் தரவை பகுப்பாய்வு செய்வதன் மூலம், கொரோனா வைரஸ் பரவல் பாதையின் தெளிவான படம் உள்ளது. எனவே, பரவலைத் தடுக்க பூட்டுதலைக் கோரினோம்.

அதிகாரிகளால் வெளியிடப்பட்ட முரண்பட்ட தரவுகளுடன் கூட, வைரஸ் நாடு முழுவதும் அதன் சொந்த பாதையை எடுத்துள்ளதை எந்தவொரு நிபுணரும் புரிந்து கொள்ள முடியும். எனவே மக்கள் மேலும் வைரஸுக்கு ஆளாகா மல் தடுப்பது மிகவும் முக்கியம்.

தொற்று மற்றும் இறப்பு விகிதங்கள் குறையவில்லை என்பதற்கு கடந்த சில நாள்களின் தரவு மற்றொரு தெளிவான படத்தை அளித்துள்ளது.

அரசாங்கம் தனிமைப்படுத்தல் மற்றும் பயணக் கட்டுப்பாடுகளை முறையாக அமுல்படுத்தாததால், எதிர்காலத்தில் தொற்றுநோய்களின் எண்ணிக்கை அவ்வப்போது அதிகரிக்கும்போது, நாடு பூட்டப்பட்ட நிலையில் வைக்கப்பட வேண்டியிருக்கும்.

வைரஸின் சங்கிலியை உடைக்க குறைந்தது 10 நாட்கள் தேவைப்படும். பெரும்பான்மையான பொதுமக்கள் வீட்டுக்குள் இருந்தால் மட்டுமே அதை அடைய முடியும்-என்றார்.

# 2139 பேர் குணமடைவு

கொழும்பு, ஓக. 27

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருந்த மேலும் 2 ஆயிரத்து 139 பேர் பூரண குணமடைந்து நேற்று வியாழக்கிழமை வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

இதனையடுத்து, இலங்கையில் இதுவரை கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 51 ஆயிரத்து 69 ஆக அதிகரித்துள்ளது.

இலங்கையில் இதுவரை 4 இலட்சத்து 7 ஆயிரத்து 768 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேநேரம், கொரோனா தொற்றினால் இதுவரையில், 7 ஆயிரத்து 948 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஊரடங்கை நீடிக்குமாறு வலியுறுத்து!

கொழும்பு, ஓக. 27

நாட்டில் 10 நாட்களுக்கு அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் மேலும் ஒருவார காலத்துக்காவது நீடிக்கப்படவேண்டும் என்று மருத்துவர் சங்கங்களும், சுகாதார தரப்பினரும் கோரிக்கை விடுத்துவருகின்றனர்.

தொழிற்சங்கங்களும் இந்த கோரிக்கையை விடுத்துள்ளதுடன், விஞ்ஞானபூர்வமான முடக்கவே அவசியம் எனவும் வலியுறுத்திவருகின்றன.

இந்நிலையில் நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை எதிர்வரும் 30 ஆம் பிறகும் நீடிப்பது தொடர்பில் இன்று வெள்ளிக்கிழமையே தீர்மானம் எடுக்கப்படும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவ நிபுணர் அசேல குணவர்த்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலணி கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெறும். இதன்போது தொற்றாளர்கள் மற்றும் மரண எண்ணிக்கை தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டு நிலைமை மீளாய்வு செய்யப்படும். அதன்பின்னரே ஊரடங்கு உத்தரவை நீடிப்பதா, தளர்த்துவதா என்று முடிவெடுக்கப்படும்-என்றார் அவர்.

# இராஜகிரிய காளி கோயில் பிரதம குரு காலமானார்

கொழும்பு, ஓக. 27

மஹா வீர பத்திரகாளி அம்மன் ஆலய பூசகரும் பிரதம குரு வாஸ்து சித்தர் ஸ்ரீ வித்யா உபாசகர் சுவாமி காளி கனகரத்தினம் காலமானார். கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் நேற்றுமுன்தினம் காலமானரென ஆலய நிர்வாக சபை தெரிவித்துள்ளது.

சுவாமிகள், கொழும்பு-ராஜகிரிய பகுதியில் வசித்து வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் 6 மாத குழந்தை கொரோனாவால் உயிரிழப்பு!

வவுனியா, ஓக. 27

வவுனியாவில் 6 மாத குழந்தை ஒன்று கொரோனா தொற்றுக்கு பலியாகனதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

குறித்த குழந்தைக்கு சுகவீனம் ஏற்பட்ட நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின்போது கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டபோதும் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை மரணமடைந்தது.

இதேவேளை, வவுனியா தோணிக்கல் பகுதியை சேர்ந்த 61 வயதான பெண்மணி ஒருவரும் கொரோனா தொற்றுக்கு இலக்காகி நேற்று முன்தினம் இரவு மரணடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மரணபீதி ஏற்படுத்திய மலைப்பாம்பு சிக்கியது

கொழும்பு, ஓக. 27

நீண்ட காலமாக பொது மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தி வந்த 13 அடி நீளமான மலைப்பாம்பு மீட்கப்பட்டு பாதுகாப்பாக வனத்தில் விடுவிக்கப்பட்டுள்ளது.

பலாங்கொடை பின்னவலை பிரதேசத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இப்பிரதேசத்தில் அடிக்கடி பல இடங்களில் தென்பட்ட இந்த மலைப்பாம்பால் இப்பிரதேசத்தில் மக்கள் வீடுகளில் அச்சத்துடனே இருந்தனர். குழந்தைகள் மற்றும் பூனை, நாய், ஆடுகள் போன்ற பிராணிகளுக்கு ஆபத்து ஏற்படலாமென அஞ்சினர். எனினும் இந்த மலைப்பாம்பு இடையிடையே தலைமறைவாகியதால் பிரதேச மக்களின் அச்சம் பல மடங்கு அதிகரித்தது.

இதனால் இதனைத் தேடி கண்டுபிடித்து பிரதேச மக்கள் மத்தியில் நிலவும் அச்சத்தை நீக்குவற்கு பிரதேச இளைஞர்கள் எச்சரிக்கையாக இருந்தனர். இந்நிலையில் கடந்த செவ்வாய்



இந்த மலைப்பாம்பை கண்ட ஓட்டோ சாரதி ஒருவர் இவ்விடயத்தை ஊர் மக்களுக்கு அறிவூட்டியதையடுத்து அதனைப் பிடிக்க முழு முயற்சி மேற்கொண்டபோது மலைப்பாம்பு புதர்களுக்குள் மறைந்து குழி ஒன்றினுள் புகுந்துள்ளது.

இதனைப் பிரதேச மக்களால் மீட்க முடியாத நிலையில் பெலிஹுல்ஓய வனப்பாதுகாப்பு காரியாலயத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவ்வதிகாரிகள் குழியொன்றினுள் மறைந்திருந்த மலைப்பாம்பை மீட்டுச் சென்றதுடன் அதனை பெலிஹுல்ஓய வனாந்தரத்தில் விடுவிப்பதாகவும் தெரிவித்தனர்.

# ஊரடங்கை மறந்த கொழும்பு; வீதிகளில் நிரம்பிய வாகனங்கள்

கொழும்பு, ஓக. 27

தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் நேற்று கொழும்பின் பிரதான வீதிகள் பலவற்றில் கடுமையான வாகன நெரிசல் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

அத்தியாவசிய சேவைகளை மேற்கொள்ளும் வாகனங்களுக்கு மேலதிகமாக ஏனைய காரணங்களுக்காக பல வாக னங்கள் கொழும்புக்குள் நுழைந்தன.

பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்புப் பிரிவினரால் அனைத்து வாகனங்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதன் காரணமாக, பல வாக னங்களுக்கு மிக நீண்ட வரி சையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டிருந்தாலும், பயணத்தடைகளை கடுமையாக்காவிட்டால் தற்போதைய ஊரடங்கு உத்தரவில் எவ்விதமான பயனும் ஏற்படப்போவதில்லை என சுகாதார பிரிவினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# ஊழியர்களுக்கு கொரோனா தொற்று! வலி.மேற்கு பிரதேச சபை முடக்கம்

யாழ்ப்பாணம், ஓக. 27

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத்தில் பணிபுரிந்துவரும் ஊழியர்கள் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சுழிபுரத்தில் அமைந்துள்ள குறித்த காரியாலயத்தின் ஊழியர்கள் அத்தியாவசிய தேவை கருதி சுழற்சி முறையில் பணிக்கு அழைக்கப்பட்டு வந்தனர்.

அவர்களில் இருவர் நோய் அறிகுறிகள் காணப்பட்ட நிலையில் கொரோனா பரிசோதனைக்கு உள்ளாகினர். அவர்கள் இருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களுடன் பணியாற்றிய இன்னொரு ஊழியருக்கும் நோய் அறிகுறி காணப்படுவதால் பரிசோதனைக்காக சென்றதாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை பணிமனையை தற்காலிகமாக மூடி அனைத்து ஊழியர்களுக்கும் பரிசோதனைகள் மேற்கொண்ட பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிக்கப்படும் என்று பிரதேச சபை தவிசாளர் நடனேந்திரன் தெரிவித்தார்.

(அ)



## இரண்டரை கோடி ரூபாயை ஊரடங்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளித்த நபர்

கொழும்பு, ஓக. 27

களனி பிரதேசத்தைச் சேர்ந்த சீ.மஞ்சுள பெரேரா எனும் வர்த்தகர், தனிமைப்படுத்தல் ஊரடங்கினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இரண்டரை கோடி ரூபாய் பணத்தை பங்கிட்டு கொடுத்துள்ளார். ஹுனுப்பிட்டிய நாஹேன பிரதேசத்திலுள்ள மக்களுக்கே இவர் இத்தொகையை 1000 ரூபாய் வீதம் பகிர்ந்தளித்துள்ளார்.

# இலங்கைக்கு ஒட்சிசனை வழங்க முன்னுரிமை கொடுக்கவேண்டும்

### சுகாதார அமைச்சர் இந்தியாவிடம் கோரிக்கை



**கொழும்பு, ஓக.27**

**இலங்கைக்கு ஒட்சிசன் வழங்குவது தொடர்பில் முன்னுரிமை வழங்குமாறு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லேவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் நடமாடும் ஒட்சிசன் தொகுதிகளை நாட்டுக்கு பெற்றுக்கொள்வது தொடர்பிலும் இதன்போது தூதுவருடன் கலந்துரையாடப்பட்டதாக சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளது.

சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவுக்கும் இந்திய தூதுவர் கோபால் பாக்லேயுக்கும் இடையிலான உத்தியோக பூர்வ சந்திப்பு சுவசிறிபாய - சுகாதார அமைச்சின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடை பெற்றது.

இந்தியாவில் உற்பத்தி செய்யப் ணபடும் நடமாடும் ஒட்சிசன் தொகுதி தற்போதைய நிலையில் மிகவும் அத்தியாவசியமானதொன்று எனவும், ஒட்சிசன் தேவைப்பாடு தொடர்பில் முன்னுரிமை வழங்கி, இந்தியா நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என தாம் எதிர்பார்ப்பதாகவும் இதன்போது சுகாதார அமைச்சர் கூறியுள்ளார்.

## வதந்திக்கு முற்றுப்புள்ளி வைத்தார் அஜித் ரோஹண!

கொழும்பு, ஓக. 27

கொரோனா தொற்றுக்குள்ளாகி கொழும்பு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹணவின் உடல்நலம் குறித்து பல்வேறு செய்திகள் வெளியாகியிருந்தன.

பொலிஸ் தலைமையகமும் இவற்றை மறுத்து செய்தி வெளியிட்டிருந்தது.

இந்நிலையில் அஜித் ரோஹண, தாம் உடல்நலத்துடன் இருப்பதாக சுயபடமொன்றை வெளியிட்டு உறுதிப்படுத்தியுள்ளார்.



இதனையடுத்து அவரின் உடல்நலம் குறித்தான வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது .

# கொமர்ஷல் வங்கி யாழ்.கிளையில் 12 பேருக்கு கொரோனா தொற்று!

யாழ்ப்பாணம், ஓக. 27

யாழ். போதனா வைத்திய சாலை வீதியில் அமைந்துள்ள கொமர்ஷல் வங்கியின் பிரதான கிளையில் பணியாற்றும் 12 பேருக்கு கோவிட்-19 நோய்த் தொற்று உள்ளமை கண்டறியப்பட்ட நிலையில் அந்தக் கிளை தற்காலிகமாக மூடப்பட்டது.

அத்துடன், அந்தக் கிளையில் பணியாற்றும் 40 உத்தியோகத்தர்கள், சுத்திகரிப்பு தொழிலாளிகள் சுயதனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

கொமர்ஷல் வங்கியின் யாழ்ப்பாணம் பிரதான கிளையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள், சுத்திகரிப்புத் தொழிலாளிகள் என 34 பேரிடம் நேற்று முன் தினம் மாதிரிகள் பெறப்பட்டு பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டன.

அவர்களில் சுத்திகரிப்பு தொழிலாளி ஒருவர் உட்பட 12 பேருக்கு கோவிட்-19 நோய்த் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதனால் அங்கு பணியாற்றும் 40 உத்தியோகத்தர்களை சுயதனிமைப்படுத்தி கொமர்ஷல் வங்கியின் யாழ்ப்பாணம் பிரதான கிளையை தற்காலிக மூட மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி அறிவுறுத்தியுள்ளார்.

மேலும் அங்கு நிரந்தரக் கடமையாற்றுபவர்கள் தவிர்ந்த வேறு கிளைகளில் பணியாற்றும் உத்தியோகத்தர்களைக் கடமைக்கு அமர்த்தி உரிய சுகாதார நடைமுறைகளின் கீழ் கிளையின் நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்கலாம் என பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்சீவன் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

(அ-03)

# சர்வக்கட்சி பொறிமுறைக்கு ஜனாதிபதி தயங்குவது ஏன்?

### கேள்வி எழுப்புகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஓக. 27

“கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் மற்றும் மரண எண்ணிக்கையை மூடிமறைப்பதாலேயே சர்வக்கட்சி தலைவர்கள் கூட்டத்தை நடத்தி சர்வக்கட்சி பொறிமுறையை உருவாக்குவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தயங்குகின்றார்.” - என்று ஜே.வி.பி. குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஜே.வி.பியின் அரசியல் குழு உறுப்பினரும், வைத்தியருமான நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் கூறியவை வருமாறு:

கொரோனா வைரஸ் நெருக்கடி நிலைமையை சமாளித்து நாட்டையும், மக்களையும் மீட்பதற்கு அனைவரும் இணைந்து பணியாற்றுவோம், அதற்காக சர்வக்கட்சி பொறிமுறையை உருவாக்குமாறு கோரிக்கை விடுத்தோம். ஆனால், அவ்வாறானதொரு கூட்டத்தை ஜனாதிபதி நடத்த மாட்டார். சர்வக்கட்சி பொறிமுறையையும் அவர் உருவாக்க மாட்டார். ஏனெனில் அதற்கான காரணத்தையும் ஆளும் கட்சி எம்.பியொருவரே அண்மையில் பகிரங்கப்படுத்தினார்.

இராணுவ அதிகாரி ஒருவரும், இரு மருத்துவ நிபுணர்களும் கொரோனா தரவுகளை மாற்றியமைக்கின்றனர் என்ற விடயத்தை குறிப்பிட்டிருந்தார். எனவே, சர்வக்கட்சி பொறிமுறையொன்று உருவாக்கப்படுமானால் தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் மரண எண்ணிக்கை தொடர்பில் உண்மையான தகவல்கள் வெளியிடவேண்டும். கோவிட் நிதியத்துக்கு கிடைத்த பணம் மற்றும் தடுப்பூசிக்காக எவ்வளவு செலவிடப்படுகின்றது என்பதை குறிப்பிட வேண்டும்.

ஆட்சியாளர்கள் தரவுகள் - தகவல்களுடன் விளையாடுகின்றனர். எனவே, சர்வக்கட்சி பொறிமுறையை ஜனாதிபதி வகுக்கப்பட்டார். சிலவேளை, ஊடக பிரசாரத்துக்காக சர்வக்கட்சி தலைவர்கள் கூட்டத்தை வேண்டுமானால் நடத்தலாம்.

தகவல்கள் மறைக்கப்படவில்லை, மாற்றப்படவில்லை எனில் ஆளுங்கட்சி எம்.பியின் கூற்றை அரசு மறுத்திருக்க வேண்டும். அவ்வாறு மறுக்கவில்லை. உண்மையை கண்டறிவதற்கான விசாரணையும் மேற்கொள்ளவில்லை. 200 மரணங்கள், 4 ஆயிரம்வரை தொற்றாளர்கள் என்றே கூறப்படுகின்றது. இது பொய்.

இன்று தனியார் வைத்தியசாலைகளில் அன்ரிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்படுவதில்லை. வீடுகளில் உள்ளவர்களுக்கும் செய்யப்படுவதில்லை. ஏனெனில், தொற்று உறுதியானால் அவர்களுக்கு சிகிச்சையளிக்க இடமில்லை. 20 ஆயிரம் வரை கொரோனா பரிசோதனை செய்தவிட்டு அதிலும் சரியான தகவலை வெளியிடாமல் உள்ளனர். தொற்று நோயுடன் அரசியல் விளையாட்டு விளையாடக் கூடாது. ஏனெில் சரியான தகவல்கள், தரவுகள் இருந்தால் மட்டுமே உரிய தீர்மானங்களை எடுக்க முடியும்-என்றார்.

# சீனி விலையில் மாற்றமா?

### தன்னால் எதுவும் செய்யமுடியாது என்கிறார் இராஜாங்க அமைச்சர்!

கொழும்பு, ஓக. 27

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலில் உள்ள நிலையில் திடீர் என ஒரு கிலோ கிராம் சீனியின் விலை 50 ரூபாயால் அதிகரித்துள்ளது.

கடந்த வாரம் 160 ரூபாயாக இருந்த ஒரு கிலோ சீனியின் விலை இந்த வாரம் 210 ரூபாயாக அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விலை உயர்வு நியாயமற்றது என்றாலும், அது குறித்து தன்னால் எதுவும் செய்ய முடியாது என நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தன்னிச்சையான விலை உயர்வுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது என இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன குறிப்பிட்டார்.

# வவுனியாவில் மேலும் 177 பேருக்கு தொற்று

வவுனியா, ஓக. 27

வவுனியாவில் மேலும் 177 பேருக்கு கோவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் மற்றும் அன்டிஜென் பரிசோதனையின் முடிவுகள் சில வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கோவிட் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 177 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

(அ)

# ‘ஆப்கான் நெப்போலியன்’ ஆண்ட பஞ்ஷிர் மண் தலிபானிடம் வீழுமா?

பாரிஸிலிருந்து குமாரதாஸன்

ஆப்கானிஸ்தான் முழுவதும் தலிபான்களின் பிடியில் வீழ்ந்து விட்டதாகக் கூறப் பட்டாலும் அங்கு ஒரு மலைப் பிரதேசம் இன்னமும் அவர்களுக்கு அடி பணிய மறுத்து நீண்ட யுத்தத்துக்குத் தயாராகி வருகிறது.

அதுதான் பஞ்ஷிர் பள்ளத்தாக்கு. (Panjshir Valley). அதனைக் கைப்பற்றுவதற்காகத் தனது படைகள் புறப்பட்டுள்ளன என்ற தகவலை தலிபான் இயக்கம் வெளியிட்டிருக்கிறது.

காபூல் நகரில் இருந்து வடக்கே 150 கிலோ மீற்றர்கள் தொலைவில் நாட்டின் வடக்கு மத்திய பிராந்தியத்தில்- பாகிஸ்தான் எல்லையோரம்- அமைந்துள்ளது பஞ்ஷிர் பள்ளத்தாக்கு.மத்திய ஆசியாவின் பாரம்பரிய இனக் குழுமங்களில் ஒன்றாகிய தஜிக் (Tajiks) மக்கள் அடர்த்தியாக வசிக்கின்ற மலைப் பள்ளத்தாக்கு அது.

ஆப்கானிஸ்தானைப் ”பேரரசுகளின் கல்லறை” என்று கூறினால் பஞ்ஷிர் பள்ளத்தாக்கு அதன் இருதயம் போன்றது. அங்குள்ள மக்களுக்கென்று சிறப்பான தனித்துவம் இருக்கிறது.

பல தசாப்தங்களாக ஆப்கானிய கெரில்லாப் போர்களின் அடக்க முடியாத மையமாக அது விளங்கி வருகிறது.மனத் திடமும் மலைகளின் அரணும் கொண்ட பஞ்ஷிர் மக்களை வல்லரசுகளால் கூட வெல்ல முடியவில்லை.

### ஐந்து சிங்கங்கள்

பஞ்ஷிர் என்றால் “ஐந்து சிங்கங்கள்“ என்று அர்த்தம். 19 ஆம் நூற்றாண்டில் ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்த பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் பஞ்ஷிர் பள்ளத்தாக்கை வெற்றிகொள்ள முடியவில்லை. அதன் பிறகு 1980 களில் சோவியத் யூனியன் படைகளின் ஆக்கிரமிப்பின் போதும் அவர்களால் பள்ளத் தாக்கை நெருங்க முடியாமற் போனது. அதற்குக் காரணமாக விளங்கியவர்தான் “பஞ்ஷிர் சிங்கம்” ("Lion of Panjshir") என அழைக்கப்பட்ட அஹ்மத் ஷா மசூத்(Ahmad Shah Massoud) ஆப்கானிஸ்தானின் “நெப்போலியன்” என்றும் அவரைக் குறிப்பிடுகிறார்கள்.

பத்து ஆண்டுகால ஆப்கான் - சோவியத் யுத்தத்தின் போது அஹ்மத் ஷா மசூத் தலைமையிலான முஜாஹிதீன் போராளிகளது கடும் எதிர்ப்பை சோவியத் படை கள் பஞ்ஷிர் பள்ளத்தாக்கில் எதிர்கொள்ள நேர்ந்தது. 1996-2001 வரை நீடித்த தலிபான்களது முதலாவது ஆட்சியின் போதும் அவர்களால் அந்தப் பிரதேசத்தைக் கைப்பற்ற முடியாமற் போனது.

அக்காலப் பகுதியில் ஆப்கானிஸ்தானின் பல்வேறு ஆயுதக் குழுக்களை ஒன்று திரட்டிய அஹ்மத் ஷா, வடக்குக் கூட்டணி என்ற பெயரில் நாட்டின் முப்பது சதவீத மான சனத்தொகையை உள்ளடக்கிய வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தார்.

பின்னாளில் ஆப்கானின் புகழ் மிக்க அரசியல் தலைவராக மாறியிருந்த அஹ்மத் ஷா மசூத், 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 தாக்குதலுக்கு இரு தினங்களுக்கு முன்பாகப் படுகொலை செய்யப்பட்டார். நேர்காணல்


பஞ்ஷிர் நுழைவாயில் ஒன்றில் அஹ்மத் ஷாவின் பாரிய கட்டவுட்

**“ ஆப்கானிஸ்தானைப் ‘பேரரசுகளின் கல்லறை’ என்று கூறினால் பஞ்ஷிர் பள்ளத்தாக்கு அதன் இருதயம் போன்றது. அங்குள்ள மக்களுக்கென்று சிறப்பான தனித்துவம் இருக்கிறது. பல தசாப்தங்களாக ஆப்கானிய கெரில்லாப் போர்களின் அடக்க முடியாத மையமாக அது விளங்கி வருகிறது. மனத் திடமும் மலைகளின் அரணும் கொண்ட பஞ்ஷிர் மக்களை வல்லரசுகளால் கூட வெல்ல முடியவில்லை.**

ஒன்றுக்காக சந்திக்கச் செல்வதாகக் கூறி போலியாக செய்தியாளர் வேடத்தில் அவரை நெருங்கிய அல்கொய்தா தற்கொலைதாரி ஒருவர் தனது கமராவில் ஒளித்து வைத்திருந்த குண்டை வெடிக்கச் செய்து அஹ்மத் ஷாவைக் கொன்றார். அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்பதை முன்கூட்டியே கணித்துக் கூறியிருந்த காரணத்தினாலேயே அவர் இலக்கு வைக்கப்பட்டார் என்று அச்சமயம் கூறப்பட்டது.

மறைந்த பின்னரும் அஹ்மத் ஷா மசூத் அவர்களை பஞ்ஷிர் பள்ளத்தாக்கு மக்கள் தொடர்ந்தும் தங்கள் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடி வருகின்றனர்.பள்ளத் தாக்கினுள் செல்கின்ற நெடுஞ்சாலைகளின் வரவேற்பில் அவரது பிரமாண்டமான உருவப் படங்களை இன்றும் காணமுடிகிறது.

பஞ்ஷிர் மண்ணின் சிங்கம் அஹ்மத் ஷா மசூத்துக்குப் பின்னர் அவரின் இடத்தை அவரது புதல்வர்களில் ஒருவரான அஹ்மத் மசூத் (Ahmad Massoud) தன் வசம் வைத்துக் கொண்டு தந்தையின் காலடிச் சுவடுகளைப் பின் தொடர்கிறார்.

ஆப்கானிஸ்தானை ஆள நினைக்கின்ற உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகளுக்கு சிம்மசொப்பனமாக இருந்து வருகின்ற பஞ்ஷிர் பிரதேசம் ஆப்கானிஸ்தானில் எவ்வாறான ஆட்சி அமைய வேண்டும் என்பதைத் தீர்மானிக்கின்ற பகுதியாக இருக்கிறது. தனியான சுயாட்சி உள்ள ஒரு பிராந்தியமாக அதனை அங்கீகரிக்குமாறு அதன் தலைவர்கள் கோரிவருகின்றனர்.

தலிபான்களிடம் இருந்து தப்பிய அரச படையினர், தலிபான்களால் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாவதாக உணர்கின்ற ஏனைய பகுதிகளைச் சேர்ந்த ஆப்கான் வாசிகள், தலிபான் எதிர்ப்பு சக்திகள் அனைவரும் தற்சமயம் பஞ்ஷிர் பள்ளத்தாக்கு மக்களுடன் அணி திரண்டுள்ளனர்.

தலிபான் படைகளை எதிர்கொள்வதற்கான முன் ஆயத்தங்களிலும் பயிற்சிகளிலும் ஈடுபட்டுள்ள அவர்கள் ‘தேசிய எதிர்ப்பு முன்னணி’ (National Resistance Front) என்ற பெயருடன் அழைக்கப்படுகின்றனர். காபூலில் இருந்து விரட்டப்பட்ட முன்னாள் ஆப்கான் அரசின் துணை அதிபர் மற்றும் பாதுகாப்பு அமைச்சர், தளபதிகள் எனப் பலரும் கூட பஞ்ஷிர் பகுதியிலேயே தலைமறைவாகி உள்ளனர்.

தலிபான்களுடன் மோதுவதற்கு முன்பாக அவர்களுடன் தாங்கள் பேச்சு நடத்த விரும்புவதாக தேசிய எதிர்ப்பு முன்னணியின் பேச்சாளர் கூறியிருக்கின்றார். ஆப்கானிஸ்தானில் ஜனநாயக விழுமியங்களுடனான ஆட்சியை அதிகாரப் பகிர்வின் அடிப்படையில் ஏற்படுத்த வேண்டும். அங்கு இஸ்லாமிய ஷரியாச் சட்டங்களுக்கு ஒரு வரையறை வகுக்கப்படவேண்டும் என்பது பஞ்ஷிர் அரசியல் தலைமையின் எதிர்பார்ப்பு.

பஞ்ஷிர் பிரதேசத்தை வெல்வதற்கு தலிபான்களுக்கு கிடைத்திருக்கின்ற இரண்டாவது சந்தர்ப்பம் இது. மின்னல் வேகத்தில் நாடு முழுவதையும் கைப்பற்றிவிட்ட அவர்கள் இப்போது பஞ்ஷிரைச் சுற்றி வளைத்துள்ளனர். அங்குள்ள தலிபான் எதிர்ப்பு முன்னணிப் படைகளுக்கு முன்பு போல வெளியே இருந்து ஆயுத உதவிகள் மற்றும் விநியோகங்கள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் அறவே இல்லை.

அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் தங்களுக்கு உதவவேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இதற்கு முன்பு பஞ்ஷிர் தலைமைக்கு ஈரானின் ஆதரவு இருந்து வந்தது. இப்போது ஈரான் தலிபான் தலைமைக்கு தனது ஆதரவை வெளிப்படுத்தி உள்ளது.

மலை சார்ந்த இயற்கையான பாதுகாப்பு அரண்களால் சூழப்பட்ட பஞ்ஷிர் தலிபான்களிடம் வீழ்ந்தாலும் அவர்கள் அங்கு நீண்டதொரு கெரில்லா எதிர்ப்புப் போரைத் தொடரவேண்டி வரலாம் என்று அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

எது நேர்ந்தாலும் எதிர்த்துப் போரிட்டு மடிவது என்பதில் உறுதியாக நிற்கும் பஞ்ஷிர் தலைவர் அஹ்மத் மசூத், “ஆப்கானிஸ்தானின் சுதந்திரத்தை விட்டுக் கொடுக்காத கடைசித் துண்டு நிலமாக பஞ்ஷிர் விளங்கும்” என்று உறுதிபடக் கூறியிருக்கிறார்.

பஞ்ஷிர் வீழுமா? உலகம் அதை உற்று நோக்கியவாறு உள்ளது.





> இலங்கையைப் பொறுத்த வரையில் சீனாவின் ஆதிக்கத்திலிருந்து வெளியே வரமுடியாத ஒரு பொறியில் அது சிக்கிக்கொண்டிருப்பதாகவே இந்தியா கருதுகின்றது. அதேவேளையில், இலங்கையை மையப்படுத்திய சீனாவின் திட்டங்கள் வெறுமனே பொருளாதாரத்தை மட்டும் நோக்கமாகக்கொண்ட ஒன்றல்ல என்பதும் இந்தியாவின் கருத்தாக உள்ளது.

# இலங்கை குறித்த அணுகுமுறையை மாற்றப்போகின்றதா இந்தியா?

**அகிலன்**

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் தீவிரமாக அதிகரித்துவரும் நிலையில், இதற்கு எதிராக எவ்வாறான அணுகுமுறையைக் கையாள்வது என்பது குறித்து இந்தியா ஆலோசனை நடத்திவருவதாக அரசியல், இராஜதந்திர வட்டாரங்கள் கூறுகின்றன. ஆப்கானிஸ்தானில் ஏற்பட்டிருக்கும் ஆட்சி மாற்றம், அங்கு அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கும் தலிபான்களுடனான சீனாவின் உறவு என்பனவும் பிராந்திய அரசியலைக் கையாள்வதில் இந்தியாவின் கவனத்துக்குரிய விடயங்களாக உள்ளன.

இந்தப் பின்னணியில் இலங்கை குறித்த இந்தியாவின் அணுகுமுறையில் அதிரடியான மாற்றம் ஒன்றை இவ்வருட இறுதியில் எதிர்பார்க்கலாம் எனக் கூறுகின்றார் இந்தியாவின் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி ஒருவர். இந்தியாவின் இராஜதந்திர மட்டத்தில் நெருக்கமான உறவுகளைக் கொண்டுள்ள ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியும், பாதுகாப்பு, இராஜதந்திர ஆய்வாளருமான மேஜர் மதன் குமார், உத்தரபிரதேசத் தேர்தல் நடைபெற்று முடிந்தவுடன் இவ்வருட இறுதியில் இலங்கை குறித்த இந்தியாவின் புதிய அணுகுமுறையைக் காணக் கூடியதாக இருக்கும் எனக் கூறுகின்றார்.

இலங்கை தொடர்பான தமது அணுகுமுறையை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதையிட்டு இந்தியா சிந்திக்கத் தொடங்கியுள்ளது என்பதை வெளிப்படுத்தும் செய்திகள் ஏற்கனவே வெளியாகியிருந்தன. இலங்கையில் அதிகரித்துவரும் சீனாவின் ஆதிக்கம் தான் இதற்குக் காரணம். உலகம் முழுவதும் தீவிரமாகப் பரவியிருக்கும் கொரோனா காலத்தையும் சீனா நன்கு பயன்படுத்திக்கொண்டிருக்கின்றது. தடுப்பூசிகளை அதிகளவுக்கு வழங்கியதன் மூலமாகவும், கடனுதவிகளை வழங்கியும், இலங்கையுடனான பிணைப்பை இறுக்கமாக்கிக்கொண்டுள்ளது சீனா!

**கடன் உதவியா? பொறியா?**

சீனாவிடமிருந்து இலங்கை கடந்த 17ஆம் தேதியன்று 61.5 பில்லியன் இலங்கை ரூபாய் (6150 கோடி இலங்கை ரூபாய்) மதிப்பிலான கடனுதவியை உடன்படிக்கையொன்றின் ஊடாக பெற்றுக்கொண்டுள்ளது. ஏற்கனவே பெற்றுக்கொண்டிருக்கும் கடனுதவிகளுக்கு மேலதிகமாகவே இதனை இலங்கை பெற்றிருக்கின்றது.

இலங்கைக்கான சீன தூதரகம் தனது ருவிட்டர் பக்கத்தில், பதிவொன்றின் ஊடாக இந்த தகவலை வெளியிட்டிருந்தது. இலங்கையின் கோரிக்கைக்கு அமையவே இந்த கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கடனால் இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரிக்கும் என்ற விமர்சனம் எழுந்துள்ள அதே வேளையில், வளர்ச்சிப் பணிகளுக்கு பயன்படுத்தவே கடன் வாங்கப்பட் டுள்ளது என்று இலங்கை அரசு தெரிவிக் கிறது.

கோவிட் ஒழிப்பு நடவடிக்கைகள், பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல் மற்றும் நிதி ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துதல் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளுக்காக இந்த கடன் வழங்கப்பட்டுள்ளதாக சீனா தெரிவித்துள்ளது.

கொரோனா பரவ ஆரம்பித்த காலம் முதல், இலங்கை பாரிய பொருளாதார சிக்கல்களை எதிர்நோக்கி வருவகின்றது என்பது உண்மைதான். இலங்கையின் பிரதான வருமான வழியான சுற்றுலாத் துறை முற்றாக முடங்கிவிட்டது. ஏனைய வருமான வழிகளும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அந்நிய செலாவணி வருமானங்களும் குறைவடைந்துள்ளன.

இதனால், இலங்கை அரசாங்கம் பாரிய பொருளாதார வீழ்ச்சிகளை சந்தித்து வருவதாக அரசாங்கம் தெரிவித்து வருகின்ற நிலையிலேயே, இந்த கடன் தொகை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எது எப்படியிருந்தாலும், சீனாவின் கடன்பொறிக்குள் இலங்கை மேலும் மூழ்கிப் போகும் நிலையைத்தான் இது வெளிப்படுத்துகின்றது. ஏனெனில் சீனா வழங்கும் கடனுக்கான வட்டி வீதம் அதிகம். அத்துடன், அதனைத் திருப்பிச் செலுத்துவதற்கான காலக்கெடு குறுகியதாகவே இருக்கும்.

அவ்வாறு குறுகிய காலத்தில் கடன் தொகையை செலுத்த தவறும் பட்சத்தில், நாட்டிலுள்ள சொத்துகளை சீனாவிற்கு எழுதி கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும் சாத்தியம் காணப்படுவதாகவும் பொருளாதாரப் பேராசிரியர் ஒருவர் குறிப்பிடுகின்றார். அவ்வாறு இல்லையென்றால், பல்வேறு தேவையற்ற ஒப்பந்தங்களுக்கு செல்ல வேண்டிய நிலைமை ஏற்படும் என அவர் தெரிவிக்கின்றார். இது இலங்கை எதிர்காலத்தில் மேலும் சீனாவின் வசமாகும் வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளதைக் காட்டுகின்றது.

**இந்தியாவின் அணுகுமுறை**

இலங்கை தற்போதைய நிலையில் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்குத் தேவையானளவு உதவிகளைச் செய்யக்கூடிய நிலையில் இந்தியா இல்லை. ஆனால், சீனாவின் பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் இது சாத்தியமானதாக இருக்கும். சீனா பலமான ஒரு பொருளாதாரத்தைக் கொண்டுள்ளது என்பது மட்டும் இதற்குக் காரணமல்ல. கடனாகக் கொடுக்கும் பணத்தை உடனடியாகவே வேறு வடிவங்களில் பெற்றுக்கொள்வதற்கான உபாயங்களை சீனா கையாள்வதும் இதற்குக் காரணம்.

உதாரணமாக குறிப்பிட்ட ஒரு அபிவிருத்தித் திட்டத்துக்காக என சீனா கடனை வழங்கும் போது, அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஒப்பந்தத்தையும் சீனா நிறுவனம் ஒன்றுக்கு வழங்குமாறே நிபந்தனை விதிக்கப்படுகின்றது. அதனால், கொடுத்த கடனைவிட இரண்டு மடங்கு தொகையை சீனாவால் மீளப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். அதனைவிட வட்டி வேறு.

இவ்வாறுதான் சீனாவின் கடன் பொறி அமைக்கப்படுகின்றது. அந்தப் பொறியிலிருந்து மீள முடியாத ஒரு நிலைதான் இலங்கைக்கு ஏற்படும் என்பது பொருளாதார நிபுணர்களின் கருத்து.

இந்த நிலைமைகளை இந்தியாவும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றது. அம்பாந்தோட்டை துறைமுகம், கொழும்பு துறைமுக நகர் என்பன சீனாவுக்குக் கொடுக்கப்பட்டமை இந்தியாவுக்கு ஏற்கனவே சீற்றத்தைக் கொடுத்திருந்தது.

அதிலும் குறிப்பாக கொழும்பு துறைமுக நகர சட்டமூலத் தின் ஊடாக அதன் நிர்வாகம் தனியாகச் சென்றிருப்பதும் இந்தியாவின் பாதுகாப்பை கேள்விக்குள்ளாக்கியுள்ளது. இவை குறித்து இந்தியா மௌனமாக இருந்தாலும், கொழும்பு துறைமுக கிழக்கு முனையம் இந்தியாவுக்கு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்த உடன்படிக்கையை இலங்கை ரத்துச் செய்தமைக்கு எதிராக இந்தியா அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தது.

**இலங்கையின் திட்டம்**

இலங்கையைப் பொறுத்தவரையில் சீனாவின் ஆதிக்கத்திலிருந்து வெளியே வரமுடியாத ஒரு பொறியில் அது சிக்கிக்கொண்டிருப்பதாகவே இந்தியா கருதுகின்றது. அதேவேளையில், இலங்கையை மையப்படுத்திய சீனாவின் திட்டங்கள் வெறுமனே பொருளாதாரத்தை மட்டும் நோக்கமாகக்கொண்ட ஒன்றல்ல என்பதும் இந்தியாவின் கருத்தாக உள்ளது. சீனா தன்னுடைய பட்டுப்பாதைத் திட்டத்துக்கு இலங்கையை பலமாகப் பற்றிக்கொண்டிருக்கின்றது. அதே வேளையில், வடபகுதியிலும் சீனாவின் ஆதிக்கம் பரவலாக்கம் பெற்றுவருவது இந்தியாவுக்கு மேலும் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்தப் பின்னணியில்தான் இந்தியா தன்னுடைய வெளிவிவகாரக் கொள்கையை மாற்றிக்கொண்டு இலங்கை விடயத்தில் கடும் போக்கில் செல்வதற்கான வாய்ப்புக்கள் குறித்து மேஜர் மதன்குமார் பேசுகின்றார். இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான தற்போதைய நெருக்கத்தை மட்டுப்படுத்த வேண்டுமானால் அதிரடியாக எதனையாவது செய்தாகவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இந்தியாவுக்குள்ளது. புதுடில்லியில் கொள்கை வகுப்பாளர்கள் இதுகுறித்து நுணுக்கமாக ஆராய்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவின் இந்த நிலை இலங்கைக்கும் தெரியாத ஒன்றல்ல. மிலிந்த மொறகொடையைத் தூதுவராக அனுப்புவதன் மூலம் இந்தியாவின் சீற்றத்தைத் தணிக்க முடியும் என கொழும்பு திட்டமிடுகின்றது. மிலிந்த இந்தியப் பிரதமர் மோடியுடன் தனிப்பட்ட ரீதியில் நெருக்கமான ஒருவராகக் கருதப்படுபவர். குஜாராத் முதலமைச்சராக மோடி இருந்த காலப்பகுதியில் அங்கு இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் மிலிந்த கலந்துகொண்டிருந்தார். அதன் மூலம் இருவருக்கும் இடையிலான உறவு நெருக்கமடைந்தது. இந்தியாவைச் சமாதானப்படுத்துவதற்கு மிலிந்த என்ன செய்யப்போகின்றார் என்பதுதான் இப்போதுள்ள முக்கிய கேள்வி! ■

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
விடைகள் - I,II

### பகுதி - I

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01) | 2 | 08) | 3 | 15) | 3 | 22. | 2 | 29. | 2 | 35. | 2 |
| 02) | 3 | 09) | 2 | 16) | 1 | 23. | 2 | 30. | 3 | 36. | 1 |
| 03) | 1 | 10) | 1 | 17) | 2 | 24. | 3 | 31. | 3 | 37. | 1 |
| 04) | 3 | 11) | 2 | 18) | 3 | 25. | 3 | 32. | 2 | 38. | 3 |
| 05) | 1 | 12) | 2 | 19) | 2 | 26. | 1 | 33. | 3 | 39. | 1 |
| 06) | 3 | 13) | 2 | 20) | 3 | 27. | 2 | 34. | 2 | 40. | 2 |
| 07) | 2 | 14) | 2 | 21) | 1 | 28. | 3 | | | | |

### பகுதி - II

01.
1) சிங்கம்
2) காட்டில்
3) நீ / உனக்கு
4) கர்ஜித்து / விழுந்து / பவ்வியமாக
5) முற்றுப்புள்ளி
6) கடிக்கும் + அளவுக்கு (6x1=6 புள்ளிகள்)

02. தொடுதிரை (1 புள்ளி)

03. 1) பால் 2) ஒளி 3) வாண 4) இரை (4 புள்ளிகள்)

04. உலகிலேயே எங்களை அதிகம் பயன்படுத்துவோர் சீனமக்கள் ஆவர். (1 புள்ளி)

05.
1) ஒரு செயலை முடிக்க முனைந்து நிற்றல்.
2) பிற்போடுதல் / காலந்தாழ்த்துதல். (2x1=2 புள்ளிகள்)

06. நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு (1 புள்ளி)

07.
1) சரி
2) சரி
3) சரி (1x3=3 புள்ளிகள்)

08.
1) போலி
2) தசாப்தம் (1x2=2 புள்ளிகள்)

09.
1) வெட்டுக்கிளி
2) நீர்க்குமிழி (1x2=2 புள்ளிகள்)

10. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
இலங்கை மின்சாரசபை (1x2=2 புள்ளிகள்)

11.
1) Elephant
2) Flowers (1x2=2 புள்ளிகள்)

12.
1) தேசிய உடை
2) மீனவர் / மீனவன் (1x2=2 புள்ளிகள்)

13.
1) Are you ready?
2) I am going to the canteen (1x2=2 புள்ளிகள்)

14. வெள்ளிக்கிழமை / வெள்ளி (1 புள்ளி)

15. ஒயாட்ட அம்ப ஒனத? (1 புள்ளி)

16. ஐயாயிரத்து அறுநூற்று அறுபத்து ஒன்று.
ஐந்தாயிரத்து அறுநூற்று அறுபத்தொன்று. (1x2=2 புள்ளிகள்)

17. 1) XV (1x2=2 புள்ளிகள்)

18.
i) 12
ii) சதுரம், செவ்வகம் (1x2=2 புள்ளிகள்)

19.
i) 0.2
ii) $\frac{8}{10}$ , $\frac{4}{5}$ (1x2=2 புள்ளிகள்)

20.
i) 12, 4
ii) 25, 32 (1x2=2 புள்ளிகள்)

21. 6, 8, 16, 20 (1x2=2 புள்ளிகள்)

22. 60 மாம்பழங்கள் (1x2=2 புள்ளிகள்)

23. 32ℓ 625mℓ (1x2=2 புள்ளிகள்)

24. 1) 60.00 2) 225.00 3) 120.00 4) 405.00 (1x4=4 புள்ளிகள்)

25. 125m (1x2=2 புள்ளிகள்)

26. பி.ப. 2.35 / 14 : 35
17: 15 (1x2=2 புள்ளிகள்)

27.
1) பொருத்தமாகக் குறித்துக் காட்டப்படல்
2) 35 மாணவர்கள் (1x2=2 புள்ளிகள்)

28. 1m 40 cm/ 140 cm (1x2=2 புள்ளிகள்)

29. ரூபாய் 75.00 (1x2=2 புள்ளிகள்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 30) | 3 | 36) | 1 | 42) | 1 | 48) | 2 | 54) | 2 |
| 31) | 2 | 37) | 1 | 43) | 2 | 49) | 1 | 55) | 3 |
| 32) | 3 | 38) | 3 | 44) | 3 | 50) | 3 | 56) | 1 |
| 33) | 3 | 39) | 3 | 45) | 1 | 51) | 1 | 57) | 2 |
| 34) | 2 | 40) | 3 | 46) | 3 | 52) | 2 | 58) | 1 |
| 35) | 2 | 41) | 2 | 47) | 2 | 53) | 2 | 59) | 3 |

(1x30= 30 புள்ளிகள்)

60.
1) நாம் மற்றவர்களிடமிருந்து இரண்டு மீற்றர் தூரம் விலகி இருக்க வேண்டும்.
2) எமது கைகளை குறைந்தது இருபது விநாடிகளுக்கு சவர்க்காரமிட்டு நன்றாகக் கழுவ வேண்டும்.
3) மற்றவர்களுடன் கை குலுக்குவதையும் தொடுவதையும் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

**குறிப்பு:-** எழுத்துக்கள் தெளிவாகவும் உறுப்பமைவாகவும் எழுதியிருப்பின் முழு விடைத்தாளையும் கவனத்தில் கொண்டு இரண்டு புள்ளிகள் வழங்குக.

# ஓகஸ்ட் 30இற்கு பின்னரும் நாட்டை முடக்கக்கூடாது!

## தனது விருப்பம் இதுவே என்கிறார் சுகாதார அமைச்சர் கெஹலிய

கொழும்பு, ஓக. 27

"நாட்டில் தற்போது அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை எதிர்வரும் 30ஆம் திகதிக்குப் பின்னரும் நீடிக்கக்கூடாது என்பதே எனது விருப்பம்."

- இவ்வாறு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

பல தரப்பினரின் கோரிக்கைகளுக்கு அமைவாகவே இம்முறை நாடு முடக்கப்பட்டது என்றும் அவர் கூறினார்.

உலகின் முன்னணி நாடுகள் பலவும் நாட்டை முடக்கிவிட்டு முன் னேறிச் செல்வது கடினம் என்றும், சுகாதார வழிமுறைகளுக்கு அமைவாக கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே அந்த நாடுகள் இருக்கின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டை முடக்கிவிட்டு கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியாது என்பதை உலக நாடுகள் அனைத்தும் தற்போது ஒப்புக்கொண்டுள்ளன என்றும் சுகாதார அமைச்சர் கெஹலிய மேலும் குறிப்பிட்டார். (இ)



# விஞ்ஞானபூர்வமாக நாட்டை முடக்கவும்!

## வாயைமூடி பயனில்லை என்கின்றது தேசிய தொழிற்சங்க மத்திய நிலையம்

**கொழும்பு, ஓக.27**

**"கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டை முடக்குமாறு பல தரப்பினரும் கோரிக்கை விடுத்தனர். எனினும், விஞ்ஞானபூர்வமாக நாடு முடக்கப்படவில்லை. மாறாக பொதுமுடக்கம் கோரிக்கையை விடுத்தவர்களின் வாயை மூடும் விதத்திலேயே தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது."**

- இவ்வாறு தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"நாட்டில் பயணத்தடை முறையாக அமுல்படுத்தப்படவில்லை. நாட்டிலுள்ள பாதிப் பேர் தொழிலுக்குச் செல்கின்றனர். நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு நிதி அவசியம். ஆகவே, நீங்கள் வேலை செய்யுங்கள் என அரசு கூறுகின்றது.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே நாடு முடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையே முன்வைக்கப்பட்டது. அந்தக் கோரிக்கை முறையாக நிறைவேற்றப்படவில்லை.

மாறாக கோரிக்கை விடுத்தவர்களின் வாயை மூடும் விதத்திலேயே நாடு மூடப்பட்டுள்ளது. இதனை ஏற்கமுடியாது. எனவே, விஞ்ஞானபூர்வமாகவே முடக்கல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும்" - என்றார்.



இதேவேளை, கொரோனா வைரஸ் விவகாரத்தை பயன்படுத்தி குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு எதிரணி முயற்சிக்கின்றது எனவும், நாட்டு மக்களைப் பாதுகாக்கும் நோக்கிலேயே நாட்டை முடக்கும் கோரிக்கை அரசின் பங்காளிக் கட்சிகளால் விடுக்கப்பட்டது எனவும் தேசிய சுதந்திர முன்னணியின் உறுப்பினர் இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீர தெரிவித்தார். (இ)

# ஊரடங்கு சட்டத்தை மீறிய மேலும் 581 பேர் சிக்கினர்!

கொழும்பு, ஓக. 27

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 581 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 58 ஆயிரத்து 995 ஆக அதிகரித்துள்ளது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)



# தனிமைப்படுத்தப்பட்டார் யாழ். மாவட்ட அரச அதிபர்

## சங்கானை பிரதேச செயலருக்கும் தொற்று

யாழ்ப்பாணம், ஓக. 27

யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

மாவட்ட அரச அதிபரின் பணிக்குழாமிலுள்ள அலுவலக உதவியாளர் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

இதேவேளை, சங்கானை பிரதேச செயலர் திருமதி பிரேமினிக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.



சிகிச்சைக்காக வைத்தியசாலைக்குச் சென்றபோது அவருக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (இ - 03)

# ஊரடங்கில் வேட்டைக்கு சென்ற மூவர் மாட்டினர்!

பொலனறுவை, ஓக. 27

நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு அமுலில் உள்ள நிலையில், விலங்குகளை வேட்டையாடுவதற்காக வனப்பகுதிக்குச் சென்ற மூவர் வனத்துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலனறுவைப் பகுதியிலேயே இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைதானவர்களிடமிருந்து துப்பாக்கி ஒன்றும், வேட்டைக்குப் பயன்படுத்தப்படும் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# நாட்டில் 2000 அப்பாவி உயிர்களை 11 நாள்களில் பறித்த கொரோனா

கொழும்பு, ஓக. 27

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் கடந்த 11 நாள்களில் 2 ஆயிரத்து 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஓகஸ்ட் 14 முதல் 24 வரையான காலப்பகுதியிலேயே குறித்த மரணங்கள் பதிவாகியுள்ளன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் நாளாந்தம் வெளியிட்டுள்ள அறிக்கைகளில் இந்த விபரம் வெளியிடப்பட்டுள்ளது.



இதன்படி 14ஆம் திகதி 161 பேரும், 15ஆம் திகதி 167 பேரும், 16ஆம் திகதி 171 பேரும், 17ஆம் திகதி 170 பேரும், 18ஆம் திகதி 186 பேரும், 19ஆம் திகதி 195 பேரும், 20ஆம் திகதி 198 பேரும், 21ஆம் திகதி 183 பேரும், 22 ஆம் திகதி 194 பேரும், 23ஆம் திகதி 190 பேரும், 24ஆம் திகதி 198 உயிரிழந்தனர். (இ)

# கம்பஹாவில் 55 கிராமசேவகர்கள் கொரோனா தொற்றால் பாதிப்பு!

கம்பஹா, ஓக. 27

கம்பஹா மாவட்டத்தில் 55 கிராம சேவகர்கள் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், மேலும் 81 கிராம சேவகர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் இலங்கை கிராம சேவகர்கள் சங்கத்தின் கம்பஹா மாவட்ட தலைவர் காமினி ரணதுங்க ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்தின் 13 பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த கிராம சேவகர்களுக்கே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு தொற்றுக்குள்ளான கிராம சேவகர்களுக்குப் பதிலாக வேறு பிரிவுகளைச் சேர்ந்த கிராம சேவகர்கள் தற்காலிகக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (இ)




# கர்நாடகாவில் மாணவிமீது கூட்டு பாலியல் வன்புணர்வு

பெங்களூர், ஒக. 27

இந்தியாவின் கர்நாடகா மாநிலத்தில் 23 வயது மாணவி ஒருவர் ஐவர் கொண்ட குழு ஒன்றால் கூட்டு பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள அந்த மாணவி தற்போது அபாய கட்டத்தை தாண்டி விட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவரின் நண்பரின் தகவலின் அடிப்படையில் ஐந்து நபர்களை பொலிஸார் தேடி வருகின்றனர்.

இந்த கூட்டு பாலியல் பலாத்காரம் சாமுண்ட் மலை பகுதியின் ஒர் ஒதுங்கிய வனப்பகுதியில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துன்புறுத்தலுக்கு இலக்கான மாணவியும் நண்பரும் புறநகர பகுதியான லலிதாத்ரிபுராவிலிருந்து இரவு 7.30 மணிக்கு வந்து கொண்டிருந்தனர். அவர்களை மது போதையிலிருந்த கும்பல் ஒன்று வழிமறித்தது. அவர்கள் மாணவியின் நண்பர் மீது மது போத்தல்களை வீசி தாக்கினர். முதலில் அவர்கள் வழிப்பறியில் ஈடுபடவே முயன்றனர் என்றும் பின்னரே தனது நண்பியை பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கி கடத்தி சென்று வன்புணர்ந்தனர் என்று மாணவியின் நண்பர் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார்.

குற்றவாளிகளை கைது செய்வதற்கு பல குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதேசமயம் மேலதிக விவரங்களை வெளியிடவும் பொலிஸார் மறுப்பு தெரிவித்தனர்.

இந்த சம்பவம், இந்திய தலைநகர் புதுடில்லியில் 2012 டிசெம்பரில் பேருந்து ஒன்றில் 23 வயது மாணவி பாலியல் பலாத்காரத்துடன் ஒப்பிடப்படுகின்றது. அந்த வழக்கில் மாணவியின் நண்பர் அளித்த தகவலின் அடிப்படையில் ஆறு பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கில் ஐந்து பேருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. நால்வர் கடந்த ஆண்டு தூக்கிலிடப்பட்டனர். ஐந்தாவது நபர் சிறையில் இறந்தார். ஒருவர் சிறுவர் என்பதால் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்படவில்லை.

இதைத் தொடர்ந்து பாலியல் வன்புணர்வுகளுக்கு எதிராக விழிப்புணர்வுகள், தண்டனை சட்டங்கள் இறுக்கமானாலும்கூட, இந்தியாவில் பாலியல் குற்றங்கள் குறையவில்லை. 2018இல் 33, 977 வழக்குகள் பதிவாகியுள்ளன. ஒவ்வொரு 15 நிடத்துக்கு ஒரு பாலியல் வன்புணர்வு குற்றம் இந்தியாவில் நடக்கின்றன. ஆனால், உண்மையில் இதன் எண்ணிக்கை அதிகம் என்று கூறப்படுகின்றது. (ஐ)

### தடுப்பூசியில் கலப்படம்

# 16.3 இலட்சம் டோஸ்களை நிறுத்திவைத்தது ஜப்பான்




ரோக்கியோ, ஒக. 27

மொடேர்னா தடுப்பூசியில் கலப்படம் உள்ளது எனக் கூறி 16.3 இலட்சம் டோஸ்களை ஜப்பான் நிறுத்தி வைத்துள்ளது.

5இலட்சத்து 60 ஆயிரம் மருந்துக் குப்பிகள் கொண்ட ஒரு தொகுதியில் மருந்து அல்லாத வேறு கலப்பட பொருள் இருப்பது கண்டறியப்பட்டதாக ஜப்பான் சுகாதார அமைச்சு கூறியுள்ளது.

அதீத முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மூன்று தொகுதி மருந்துகளை மொடேர்னா நிறுவனம் நிறுத்தி வைத்துள்ளதாக ஜப்பானில் மொடேர்னா தடுப்பூசியை விநியோகம் - விற்பனை செய்யும் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஸ்பெயினில் உள்ள உற்பத்தி ஒப்பந்தத் தளம் ஒன்றில் ஏற்பட்ட பிரச்னை காரணமாக இது நிகழ்ந்திருக்க வாய்ப்புள்ளது என்று கூறிய அந்த நிறுவனம் மேற்கொண்டு அது பற்றி விவரிக்கவில்லை. "தடுப்பூசியின் வீரியம், பாதுகாப்பு தொடர்பான எந்தப் பிரச்னையும் இதுநாள் வரை அடையாளம் காணப்படவில்லை," என்று மொடேர்னா நிறுவனம் கூறியுள்ளது. (ஐ)

# இஸ்ரேல் இராணுவம் பலஸ்தீனர்கள் மோதல்!

காஸா, ஒக. 27

இஸ்ரேல் இராணுவத்துக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையே நேற்று முன்தினம் மோதல் வெடித்தது.

இஸ்ரேல் - பலஸ்தீனம் இடையே காஸா முனை விவகாரத்தில் நீண்டகாலமாக மோதல் நிலவி வருகின்றது. இந்த நிலையில், காஸா பகுதியை ஆளும் ஹமாஸ் அமைப்பை இஸ்ரேல் பயங்கரவாத அமைப்பாக அறிவித்துள்ளது. இதனால், அந்தப் பகுதிக்கான எல்லைகளை மூடி பொருளாதார தடையை அந்தப் பகுதியில் இஸ்ரேல் விதித்துள்ளது.

இதை மீறி வேறு வழிகள் மூலம் பலஸஸ்தீனர்கள் பொருட்களை கொண்டு வந்தனர். இந்த நிலையில், காஸாவுக்கான சகல வழிகளையும் இஸ்ரேல் அடைத்தது.

இதையடுத்து நேற்று முன்தினம் முதல் இஸ்ரேலின் எல்லைப் பகுதியான கன்யூனிஸ் பகுதியில் குவிந்த பலஸ்தீனர்களுக்கும் இஸ்ரேல் படையினருக்கும் இடையே மோதல் வெடித்தது. பலஸ்தீனர்கள் கற்களை வீசி இராணுவத்தினரை தாக்கினர்.

பதிலுக்கு, இஸ்ரேல் இராணுவம் பலஸ்தீனர்கள்மீது கண்ணீர் புகைகுண்டுகள் வீசியும், இறப்பர் குண்டுகளால் துப்பாக்கி சூடும் நடத்தினர். இதில், 9 பலஸ்தீனர்கள் காயமடைந்தனர். (ஐ)





# தலிபான்களுடன் சீனா முதன்முறையாக பேச்சு

பீஜிங், ஒக. 27

ஆப்கான் தலைநகர் காபூலில் தலிபான்களுடன் முதன்முறையாக பேச்சு நடத்தியதாக சீனா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சீன வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் வாங் வென்பின் புதன்கிழமை தகவல் அளிக்கையில்,

தலிபான்களுடன் முதன்முறையாக தூதரகத் தொடர்பை ஏற்படுத்தியுள்ளோம். அவர்களுடன் எந்த வித தடையுமில்லாமல் பேச்சு நடத்தி வருகிறோம். இரு தரப்பிலும் தகவல்களும் ஆலோசனைகளும் பரிமாறப்பட்டன.

முக்கியமான விவகாரங்களில் இரு தரப்பு பேச்சுக்கு காபூல் நகரம் முக்கிய தளமாகத் திகழ்கின்றது.

ஆப்கான் மக்களின் உணர்வுகளையும் சுதந்திரத்தையும் சீனா மதிக்கிறது. அந்த நாட்டின் எதிர்காலம் குறித்து அவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும் என்பதில் சீனா உறுதியுடன் உள்ளது - என்றார். (ஐ)

# ஐ.நா. ஊழியர்கள் மீது தலிபான்கள் தாக்குதல்



நியூயோர்க், ஒக. 27

ஐக்கிய நாடுகள் சபையைச் சேர்ந்த ஊழியர்களைத் தலிபான்கள் தாக்கிய விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

"காபூல் விமான நிலையத்துக்கு தப்பிச் செல்லவிருந்த ஐக்கிய நாடுகள் சபையின் ஊழியரை தலிபான்கள் விரட்டிச் சென்று தாக்கினர். மேலும், காபூலில் இருந்த இன்னொரு ஐ.நா. ஊழியரும் தாக்குதலுக்கு இலக்கானார். மேலும், அங்கிருக்கும் ஐ.நா. ஊழியர்களுக்கு அவர்கள் மிரட்டல் விடுத்துள்ளனர்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை ஐக்கிய நாடுகள் சபையும் உறுதி செய்துள்ளது. இதுகுறித்து ஐக்கிய நாடுகள் சபையின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், "இந்த விவகாரம் தொடர்பாக நாங்கள் விசாரணை செய்து வருகிறோம். காபூலில் ஆட்சிப் பொறுப்பேற்றுள்ளவர்கள்தான் அங்குள்ள அதிகாரிகளின் பாதுகாப்புக்குப் பொறுப்பு" என்று தெரிவித்தார்.

எனினும் தலிபான்கள் இந்தத் தாக்குதலுக்கு இது வரை விளக்கம் அளிக்கவில்லை. (ஐ)

### பெண்களிடம் எப்படி நடப்பது?

# படைகளுக்கு பயிற்சி அளிக்கும்வரை பெண்கள் வேலைக்கு செல்லக்கூடாது!



தலிபான்கள் அறிவிப்பு

காபூல், ஒக. 27

பெண்களிடம் எப்படி நடந்து கொள்வது என்று எங்களுடைய படைகளுக்கு பயிற்சி அளிக்கும் வரை வேலைக்குச் செல்லும் பெண்கள் வீட்டிலேயே இருக்கவேண்டும் என்று தலிபான் செய்தித்தொடர்பாளர் ஜபிஹூல்லா முஜாஹித் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்கள் படைகளுக்கு பெண்களிடம் எப்படி நடந்துகொள்வது, பெண்களுடன் எப்படிப் பேசுவது என்று பயிற்சி அளிக்கப்படவில்லை. எனவே, பெண்கள் பாதுகாப்பு கருதி இந்த சூழ்நிலை மாறும்வரை வீட்டில் இருக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இது தற்காலிகமான நடைமுறையே. பெண்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டவுடன் பணிக்குத் திரும்ப அனுமதிக்கப்படுவார்கள் என்று தெரிவித்துள்ளார்.

மேலும், பெண்களுக்கு மதிப்பளிக்கிறோம் என்று உலகத்தை நம்ப வைப்பதற்காக தலிபான்கள் இவ்வாறு தெரிவிக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

ஆனால், ஆப்கானிஸ்தானில் பெண்கள் வேலைக்குச் செல்லக் கூடாது, முகத்தை மறைக்கும்படி பர்தா அணிய வேண்டும் என்று தலிபான்கள் கூறுவதுடன், திருமணம் செய்துகொள்ள பெண்கள், சிறுமிகளை கடத்துகின்றனர் எனவும் தகவல்கள் வெளிவருகின்றன. (ஐ)

# 78 ஓட்டங்களுடன் சுருண்டது இந்தியா!

## இங்கிலாந்து முன்னிலை



லீட்ஸ், ஓக. 27

இங்கிலாந்தின் அசத்தல் பந்து வீச்சால் 78 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது இந்திய அணி. கடந்த 34 ஆண்டு களில் மிகக் குறைந்த ஓட்டங்க ளுக்கு இந்திய அணி ஆட்டமிழந் திருப்பது இதுவே முதன்முறையா கும்.

இங்கிலாந்து - இந்திய அணி களுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி நேற்று முன் தினம் லீட்ஸில் ஆரம்பமானது.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பாட் டத்தைத் தெரிவு செய்தது. இரண் டாவது போட்டியில் வெற்றிக் கூட்டணி அமைத்த ரோஹித் - ராகுல் இணை தொடக்கம் கொடுத்தது.

தொடக்க ஓவரை அனுபவ வீரரான அண்டர்சன் வீசினார். 4 பந்துகளே தாக்குப்பிடித்த ராகுல் விக்கெட் காப்பாளரிடம் பிடி கொடுத்து வெளியேறினார்.

அடுத்து வந்த புஜாராவை ஓர் ஓட்டத்துடனும், விராட் கோலியை 7 ஓட்டங்களுடனும், அண்டர்சன் வெளியேற்றினார்.

அடுத்து வந்த ரஹானே விக்கெட் வீழ்ச்சியை தடுக்க ரோஹித் சர்மாவுடன் இணைந்து போராடி னார். ஆனால், இந்தக் கூட்டணி யால் சிறிது நேரமே தாக்குப்பிடிக்க முடிந்தது. 54 பந்துகளில் 18 ஓட்டங்களை எடுத்த ரஹானே ரொபின்சனின் பந்தில் பட்லரிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

ரிஷப் பந்த் 02, ரோஹித் சர்மா 19, ஜடேஜா 4, முஹமட் சமி 0, பும்ரா 0, சிராஜ் 3 என அடுத்தடுத்து வேகமாக விக்கெட்களை பறி கொடுத்தனர்.

40.4 ஓவர்களே தாக்குப்பிடித்த இந்திய வீரர்கள் 78 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தனர்.

இங்கிலாந்து அணியின் பந்து வீச்சில் அசத்திய அண்டர்சன், கிரைக் ஓவர்ரன் ஆகியோர் தலா 3 விக்கெட்களையும், ரொபின்சன், சாம் கரன் இவ்விரண்டு விக்கெட் களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாட ஆரம்பித்த இங்கிலாந்துக்கு பேர்ண்ஸ், ஹசீப் ஹமீத் தொடக் கம் கொடுத்தனர். இருவரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப் படுத்தினர். இந்த இணையை இந்திய பந்துவீச்சாளர்களால் பிரிக்க முடியவில்லை.

இதனால், முதல் நாள் ஆட்டம் முடிவில் இங்கிலாந்து விக்கெட் இழப்பின்றி 42 ஓவர்களில் 120 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்த நிலையில், நேற்று இரண் டாம் நாள் ஆட்டம் ஆரம்பமான போது, பேர்ண்ஸ் 52 ஓட்டங்கள், ஹமீத் 60 ஓட்டங்களுடன் தொடர்ந்து ஆடினர்.

மேலதிகமாக 9 ஓட்டங்களை எடுத்த பேர்ண்ஸ் 61 ஓட்டங்களு டன் முஹமட் சமியின் பந்தில் போல்ட் ஆனார்.

இதையடுத்து ஹமீதுடன் இணைந்தார் டேவிட் மலன். இந்த இணையை நிலைக்க விடாமல் செய்தார் ஜடேஜா. 68 ஓட்டங் களை எடுத்த ஹமீதும் ஜடேஜா வின் பந்தில் போல்ட் ஆனார்.

நேற்று மதிய போசனத்திற்காக ஆட்டம் இடைநிறுத்தப்பட்ட போது 182 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை இங்கிலாந்து இழந்திருந்தது. இதனால், 104 ஓட்டங்களால் அந்த அணி முன்னிலை பெற்றிருந்தது. (ஐ)



# அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ்: செரீனா வில்லியம்ஸ் விலகல்!

நியூயோர்க், ஓக. 27

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரிலிருந்து செரீனா வில்லியம்ஸ் விலகியுள்ளார். இந்தத் தகவலை அவர் தனது இன்ஸ்ட்ராகிராம் பக்கத்தில் வெளியிட் டுள்ளார்.

அதில் அவர், "எனது மருத்துவர்கள் மற்றும் மருத் துவக் குழுவினரின் அறிவுரையை கவனமாக பரிசீலித்தப் பின்னர் நான் அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரி லிருந்து விலகமுடிவு செய்துள்ளேன். எனது உடல் முழுமையாக குணமாக நான் அனுமதிக்க வேண்டும். உலகிலேயே நான் விளையாட எனக்கு மிகவும் பிடித்த இடம், உற்சாகம் தரும் நகரம் நியூயோர்க். அங்கு எனது ரசிகர்களைப் பார்ப்பதை நான் இழந்துள்ளேன்.

ஆனாலும், தூரத்திலிருந்து அனைவரையும் உற்சா கப்படுத்திக் கொண்டே இருப்பேன். தங்கள் அனை வரின் அன்புக்கும் ஆதரவுக்கும் நன்றி. நான் உங்களை விரைவில் மீண்டும் சந்திப்பேன்", என்று பதிவிட்டுள் ளார்.

ரோக்கியோ ஒலிம்பிக் போட்டியிலும் செரீனா வில்லியம்ஸ் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக் கது. (ஐ)



# இலங்கைக்கு வந்தது தென்னாபிரிக்க அணி

கொழும்பு, ஓக. 27

ஒருநாள் தொடரில் பங்கேற்பதற்காக தென்னா பிரிக்க கிரிக்கெட் அணி நேற்று அதிகாலை இலங்கை வந்தது.

இலங்கை வந்துள்ள தென்னாபிரிக்க அணியும், இலங்கை அணியும் 3 ஒருநாள் போட்டிகள், 3 இருபது - 20 போட்டிகளில் விளையாடவுள்ளது.

ஒருநாள் போட்டி தொடர் செப். 2ஆம் திகதி ஆரம்பமாகி 7ஆம் திகதி நிறைவடைகின்றது. இருபது -20 போட்டி தொடர் செப். 10ஆம் திகதி ஆரம்பமாகி 14ஆம் திகதி நிறைவடைகின்றது.

இந்தப் போட்டிகள் அனைத்தும் கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நடைபெறவுள்ளன. (ஐ)

# உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்: இந்திய அணி முதலிடத்தில்!

டுபாய், ஓக. 27

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் புள்ளிப் பட்டியலில் 14 புள்ளிகளுடன் இந்திய அணி முதலிடத் தைப் பெற்றுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரை 2019ஆம் ஆண்டு அறிமுகப் படுத்தியது. இதன் முதல் சம்பியன்ஷிப் பட்டத்தை நியூ ஸிலாந்து அணி கைப்பற்றியது.

இந்த நிலையில், இந்தியா - இங்கிலாந்து அணிகள் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடு கின்றன. முதல் போட்டி சமநிலையில் முடிவடைந்து, இரண்டாவது போட்டியில் வெற்றி பெற்ற இந்திய அணி 14 புள்ளிகளுடன் முதல் இடத்திலுள்ளது.

பாகிஸ்தான் அணி 12 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்திலும், மேற்கிந்தியத் தீவுகள் மூன்றாம் இடத்தி லும் உள்ளன. 2 புள்ளிகளுடன் இங்கிலாந்து நான்கா வது இடத்திலுள்ளது. (ஐ)






# முதல்நிலை பந்துவீச்சாளர் ராஜஸ்தானில் இணைந்தார்!

ஜெய்ப்பூர், ஓக. 27

இருபது -20 கிரிக்கெட்டின் முதல்நிலை பந்து வீச்சாளரான தென்னாபிரிக்காவின் தப்ரெய்ஸ் சம்ஷி ராஜஸ்தான் றோயல்ஸ் அணியில் இணைந்துள்ளார்.

கொரோனா தொற்று பரவலால் இடைநிறுத்தப் பட்ட ஐ.பி.எல். போட்டி செப்ரெம்பர் மாதம் ஐக்கிய அரபு அமீரகத்தில் இரண்டாவது பாகமாக தொடரவுள் ளது.

இந்தநிலையில் ஐ.பி.எல். தொடரில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியில் இடம் பெற்றிருந்த வேகப்பந்து வீச்சாளர் அண்ட்ரூ டை தொடரிலிருந்து விலகியுள் ளார். அவரின் இடத்துக்கே தப்ரெய்ஸ் சம்ஷி அணிக்கு உள்வாங்கப்பட்டுள்ளார். தென்னாபிரிக்க வீரரான இவர் தான் இருபது - 20 கிரிக்கெட் தரவரிசையில் இன்று முதலிடத்தில் இருக்கிறார்.

ராஜஸ்தான் அணியில், ஜோப்ரா ஆர்ச்சர், பென் ஸ்ரோக்ஸ் ஆகியோர் காயங்களால் தொடரிலிருந்து விலகினர். தொற்று பயம் காரணமாக இங்கிலாந்து வீரர் லியாம் லிவிங்ஸ்ரன் விலகியுள்ளார். ஜோஸ் பட்லர், அண்ட்ரூ டை ஆகியோர் தனிப்பட்ட காரணங்களால் விலகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## தோணிக்கல் பகுதியில் கர்ப்பவதி பெண் உட்பட 31 பேருக்குக் கொரோனா தொற்று

வவுனியா, ஒக. 27

வவுனியா, தோணிக்கல் பகுதியில் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையில் கர்ப்பிணிப் பெண் உள்ளிட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் உட்பட 31 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் கொரோனாத் தொற்று வேகமாக அதிகரித்து வரும் நிலையில் நேற்றுமுன்தினமும் 177 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், பெண் ஒருவர் மரணமடைந்தார். இந்நிலையில், கொரோனாப் பரம்பலைக் கட்டுப்படுத்தும் முகமாக சுகாதாரப் பிரிவினரால் பரவலாக எழுமாறான அன்ரிஜென் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில், தோணிக்கல் பகுதியில் எழுமாறாக 93 பேரிடம் நேற்று அன்ரிஜென் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. இதில் கர்ப்பிணிப் பெண் உள்ளடங்களாக உக்குளாங்குளம் பகுதியில் வசிக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேருக்கும், தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த 24 பேருக்குமாக 31 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ)

## கொரோனா வைரஸ் கொடிய நோய் அல்ல

### திஸநாயக்க எம்.பி. கூறுகின்றார்

கொழும்பு, ஒக. 27

கொரோனா வைரஸ் தொற்று மிகவும் அச்சமடையக் கூடிய அளவிலான கொடிய நோய் அல்ல என்று சிறிலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸநாயக்க தெரிவித்தார்.

வைரஸ் தொற்றியவர்களில் நூற்றுக்கு 81 வீதமானோர் கொரோனாவால் பாதிக்கப்பட்டதை அறியாமல் வைரஸிலிருந்து மீண்டு வருகின்றனர் என்றும் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"14 வீதமானோருக்கு சிறு அளவிலான அறிகுறிகளே தென்படுகின்றன. அவர்களும்



குணமடைகின்றனர். 5 வீதமானோரோ கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர். அவர்களிலும் மூன்று வீதமானோர் குணமடைகின்றனர். 1.9 வீதமானோரோ இலங்கையில் மரணிக்கின்றனர்.

எனவே, தேவையற்ற அச்சம் அவசியமில்லை. மக்கள் மத்தியில் மரண பீதியை ஏற்படுத்தக்கூடாது" - என்றார். (இ)

# அவசியமெனில் சாத்தானுடன்கூட நாம் நேரில் பேசியே ஆக வேண்டும்

### மனோ கணேசன் எம்.பி. தெரிவிப்பு



**கொழும்பு, ஒக.27**

**அவசியமானால், நாம் சாத்தானுடன்கூட நேரில் பேசியே ஆக வேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.**

**அரசு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சு விவகாரம் தொடர்பில் மனோ எம்.பி. மேலும் கூறியதாவது:-**

"அரசு - கூட்டமைப்பு பேச்சு நடத்த முன் தயாரிப்பு வேலைகள் நடக்கின்றன. அதற்கு முன்னரே "பேச வேண்டாம், பேச வேண்டாம்" எனக் குரலும் கேட்கின்றது. அவசியமானால், நாம் சாத்தானுடன்கூட நேரில் பேசியே ஆக வேண்டும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நாம் வாக்களித்திருந்தாலும், இல்லாவிட்டாலும் கூட அவர் இந்நாட்டு ஜனாதிபதி. இது அவரது அரசு. ஆகவே, இந்த அரசுடன் பேசத்தான் வேண்டும்.

ஆனால், இந்தப் பேச்சுகளை ஜீ.எல். பீரிஸ் என்ற மனிதரை முன்னிலைப்படுத்தி நியாயப்படுத்த முனைவது அத்தனை அறிவுடைமை அல்ல.

அவர் ஒரு சிநேகபூர்வ மனிதர்தான். அவரது பாஷை நெகிழ்வுதன்மை கொண்ட பாஷைதான். ஆனால், அவர் இங்கே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பிரதிநிதி. அதைப் பேசப்போகும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மனதில் கொள்ளும் என நம்புகின்றேன்.

அதேவேளை, "பேசவே வேண்டாம்" எனக் கூறும் தரப்புகள், கூட்டமைப்பை விட்டு விட்டு, இந்தப் பேச்சுகளின் பின்புலத்து தரப்பை நோக்கி தங்கள் கேள்விகளைத் திருப்ப வேண்டும்.

அதுதான், அமெரிக்கா. அதன் இலங்கை பிரதிநிதி அலைனா டெப்லிட்ஸ்.

தமிழ் அரசியல் கைதிகள், ஆக்கிரமிப்பு நிலங்கள் மீட்பு, அரசமைப்பின் 13ஆவது திருத்தம், மாகாண சபைத் தேர்தல், 16ஆவது திருத்தம், மொழியுரிமைகள் ஆகியன இன்றுள்ள சட்டங்களின் அடிப்படையில் செய்யக்கூடிய குறைந்தபட்ச விடயங்கள்.

இவற்றை செய்ய அரசுக்கு உரிய அழுத்தங்களை அலைனா டெப்லிட்ஸ் கொடுக்க வேண்டும்.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்காவின் சடுதியான வாபஸ் நிறையப் பேரை யோசிக்க வைக்கின்றது. தங்கள் காரியம் ஆனாலோ, ஆகா விட்டாலோ, திடீரென கைவிட்டு விடுவார்களோ என்ற அச்சம் இப்போது, அமெரிக்க நண்பர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் வருவதால், இந்தச் சந்தேகம் இலங்கையில் தமிழ் மக்கள் மத்தியில் அதிகரிக்கின்றது" - என்றார். (இ)

## தற்காலிக ஏற்பாடுகள் சட்டமூலத்தில் ஒப்பம்

கொழும்பு, ஒக. 27

"2019 கொரோனா வைரஸ் தொற்று தற்காலிக ஏற்பாடுகள்' சட்டமூலத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கையொப்பமிட்டுள்ளார்.

இந்தச் சட்டமூலம் கடந்த 17ஆம் திகதி வாக்கெடுப்பின்றி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

கொரோனா நிலைமையைக் கட்டுப்படுத்தல், தொலைத் தொடர்பாடல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி நீதிமன்ற செயற்பாடுகளை முன்னெடுத்தல் உள்ளிட்ட விடயங்கள் இந்தச் சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, 2021ஆம் ஆண்டு 17ஆம் இலக்க "2019 கொரோனா வைரஸ் தற்காலிக ஏற்பாடுகள் சட்டம்" ஆகஸ்ட் 23ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது எனப் பாராளுமன்ற செயலாளர் நாயகம் அறிவித்துள்ளார். (இ)



## ஆளும் கட்சியின் உதவி கொறடாவாக பிரமித பண்டார தென்னக்கோன் எம்.பி.

கொழும்பு, ஒக. 27

பாராளுமன்ற உறுப்பினர் பிரமித பண்டார தென்னக்கோன் ஆளும் கட்சியின் உதவி கொறடாவாக நியமிக்கப்பட்டுள்ளார்.பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வால் இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்தின் தீர்மானத்துக்கமைய, இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது எனப் பிரதமரின் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

## பத்து நாள்களுக்கு நாட்டை முடக்குவதன் மூலம் ரயில் திணைக்களத்துக்கு 13 கோடி ரூபாய் நட்டம்

### பொதுமுகாமையாளர் தம்மிக ஜயசுந்தர தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 27

"கொரோனா வைரஸ் பரவலால் 10 நாள்களுக்கு நாட்டை முடக்குவதன் மூலம் புகையிரத திணைக்களத்துக்கு 13 கோடி 33 இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்படும்."

- இவ்வாறு ரயில்வே திணைக்களத்தின் பொதுமுகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாட்டை முடக்குவதால் ரயில்வே திணைக்களத்துக்கு நாளொன்றுக்கு ஒரு கோடி 30 இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்படுகின்றது. மாதமொன்றுக்கு 40 கோடி ரூபாய் நட்டம் ஏற்படுகின்றது.

ரயில்வே திணைக்களத்துக்கு மாதமொன்றுக்கு 50 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கின்றது. ஆனால், நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் ஆரம்பித்தனர் பின்னர் அந்த வருமானத்தில் 10 கோடி ரூபாய் குறைவடைந்துள்ளது" - என்றார். (இ)

## சித்தங்கேணி கொலை தொடர்பில் கைதான மூவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஒக. 27

யாழ்., வட்டுக்கோட்டை, சித்தங்கேணி, கலைவாணி வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட மூவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொலைச் சம்பவம் தொடர்பில் சித்தங்கேணியை சேர்ந்த மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று தெரிவித்தது.

தந்தையும் இரு மகன்களுமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் மூவரும் மல்லாகம் நீதிவான் ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று பகல் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது சந்தேகநபர்கள் மூவரையும் எதிர்வரும் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சித்தங்கேணியில் 49 வயதான குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுமுன்தினம் கொலை செய்யப்பட்டார். காணிப் பிரச்னை தொடர்பில் இடம்பெற்ற வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதை அடுத்து, இந்தக் கொலை இடம்பெற்றது. சம்பவத்தில் தலையில் பலத்த காயமடைந்த, உயிரிழந்தவரின் 20 வயதான மகள் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (இ - 03)

## வடக்கில் நேற்று...

தில் 443 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:

**யாழ். மாவட்டத்தில் பேர் 53 பேர்**

யாழ்.போதனா வைத்தியசாலையில் 16 பேர்,

கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் 10 பேர்,

பண்டத்தரிப்பு பிரதேச வைத்தியசாலையில் 08 பேர்,

மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையில் 02 பேர்,

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 02 பேர்,

யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 03 பேர்,

ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் 03 பேர்,

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 02 பேர்,

இளவாலை பிரதேச வைத்தியசாலையில் 02 பேர்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 02 பேர்,

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் 02 பேர்,

நொதேர்ன் சென்றல் ஹொஸ்பிற்றலில் ஒருவர்,

**வவுனியா மாவட்டத்தில் 25 பேர்**

வுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 10 பேர்,

வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் 07 பேர்,

செட்டிகுளம் ஆதார வைத்தியசாலையில் 07 பேர்,

பூவரசங்குளம் பிரதேச வைத்தியசாலையில் ஒருவர்,

**கிளிநொச்சி மாவட்டத்தில் 02 பேர்**

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஒருவர்,

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஒருவர்,

**முல்லைத்தீவு மாவட்டத்தில் 07 பேர்**

மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 03 பேர்,

வெலி ஓயா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 02 பேர்,

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் 02 பேர்,

மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் ஒருவர்,

இரணைமடு தனிமைப்படுத்தல் நிலையத்தில் 16 பேர்,

காங்கேசன்துறை கடற்படை முகாமில் 04 பேர்,

முல்லைத்தீவு விமானப்படை முகாமில் ஒருவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## வடக்கில் முதன்...

விபத்தினால் மூளைச்சாவடைந்து இணுவிலைச் சேர்ந்த தங்கராசா பிரிஞ்சன் என்ற இளைஞரின் இரண்டு சிறுநீரகங்களும் இரண்டு நோயாளிகளுக்கு தலா ஒன்று என மாற்றப்பட்டன.

சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திரம் மூலம் உயிர் வாழ்ந்த இருவருக்கும் சிறுநீரகங்கள் வெற்றிகரமாக சத்திர சிகிச்சை வல்லுநர்கள், உணர்வழியியல் வல்லுநர்கள், சிறுநீரக வல்லுநர்கள் மூலம் மாற்றப்பட்டன. கண்டியிலிருந்து சத்திரசிகிச்சை வல்லுநர் ஒருவர் அழைத்து வரப்பட்டு உதவிகளும் பெறப்பட்டன.

அதிகரித்த கோவிட்-19 நோயாளர்கள் மத்தியிலும் கடந்த 18ஆம் திகதி சிறுநீரக உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை பல மணி நேரத்தையும் தாண்டி வெற்றிகரமாக நடைபெற்றதாக யாழ். போதனா வைத்தியசாலை பதில் பணிப்பாளர், மருத்துவர் ச.ஸ்ரீபவனந்தராஜா தெரிவித்தார்.

பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் முகமாக இடம்பெற்ற ஊடக சந்திப்பில், வட மாகாணத்தில் நடத்தப்பட்ட உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை தனிநபர் என்பதை தாண்டி ஒருங்கிணைந்து எல்லோருடைய கூட்டு முயற்சியால் வெற்றிகரமாக அமைந்ததென சத்திர சிகிச்சையில் பங்கேற்ற மருத்துவ வல்லுநர்கள் கருத்து தெரிவித்தனர்.

“இனி வருங்காலங்களில் இதனை மேற்கொள்வதற்கு நாங்கள் ஒருசில கட்டமைப்புகளை ஏற்படுத்தவேண்டும். இது பற்றிய போதிய அறிவு இருந்தும் ஆளணி பற்றாக்குறை,

கட்டமைப்பின்மை போன்ற பல சிக்கல்களால் இதனை செய்ய முடியாமல் இருந்தது. இவை காலப்போக்கில் சரி வரும்போது இதனை தொடர்ந்து செய்ய முடியும்” என்றும் மருத்துவ வல்லுநர்கள் குறிப்பிட்டனர்.

சிறுநீரகம் இரண்டையும் தானமாக வழங்க முன்வந்த அந்த இளைஞனின் பெற்றோருக்கும் சகோதரர்களுக்கும் மருத்துவ வல்லுநர்கள், நிர்வாகத்தினால் நன்றி தெரிவிக்கப்பட்டது.

## சிறுவர்களுக்கு...

நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மருத்துவர் தினுஷா பெர்னாண்டோ தெரிவித்தார்.

மையத்தில் இருந்த பாதுகாப்பு அதிகாரிகள், சுகாதார ஊழியர்கள் தங்களின் நெருங்கிய நண்பர்களுக்கும் அவர்களின் குழந்தைகளுக்கும் தடுப்பூசியை வழங்கியதாகவும், இதனால் அப்பகுதியைச் சேர்ந்த 60 வயதுக்கு மேற்பட்ட ஏராளமானோருக்கு நேற்று முன் தினம் தடுப்பூசி மையத்தில் பைசர் தடுப்பூசியைப் பெற முடியாமல் போயுள்ளன எனவும் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் குறித்து உரிய விசாரணை நடத்துமாறு அப்பகுதியைச் சேர்ந்த ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் உரிய தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிலாபம் கொக்காவில தடுப்பூசி மையத்தில் நேற்று முன் தினம் ஒரு மருத்துவரின் குழந்தைகளுக்கும் பைசர் தடுப்பூசி போடப்பட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

குடும்ப சுகாதார சேவைகள் பிரிவின் பெண் ஊழியர்கள் மற்றும் பிற ஊழியர்கள் குழு இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, இந்த விவகாரம் தொடர்பில் சுகாதார துறையைச் சேர்ந்த இருவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மருத்துவர் ஒருவரும், குடுபம்நல சுகாதார உத்தியோகத்தர் ஒருவருமே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் 18 வயதுக்கு கீழ்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதற்கு இது வரை அனுமதி வழங்கப்படாத நிலையில், அவர்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

## மக்களுக்கு...

அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: -

“நாடு தனிமைப்படுத்தப்படும்போது கொடுக்கப்பட்ட 5000 ரூபாய் கொடுப்பனவு 1998 ரூபாய் வரை குறைக்கப்பட்டுள்ளது.

புதிய நிதி அமைச்சர் நியமிக்கப்பட்ட பின்னர் நாட்டுக்குச் சௌபாக்கியத்தைக் கொண்டுவருவதாக பெருமை பேசிய அரசு, முன்னெப்போதும் இல்லாத பொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது.

பொருட்களின் விலைகள் மீதான கட்டுப்பாட்டை அரசு இழந்துள்ளது.

பொதுமக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வழங்க முடியாத நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது.

இலங்கையைப் பாதுகாப்பதற்கான கூட்டுத் திட்டங்களில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, அரசு ஒவ்வொரு நாளையும் கடத்துவதற்காக தலைப்புச் செய்திகளை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது” - என்றுள்ளது. (இ)



# ஆஸி. தூதுவருடன் பீரிஸ் சந்திப்பு

### இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்தல் குறித்து பேச்சு

கொழும்பு, ஒக. 27

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸுக்கும் இலங்கைக்கான அவுஸ்திரேலியாவின் தூதுவர் டேவிட் ஹொலிவுக்கும் இடையில் முக்கிய சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது அவுஸ்திரேலியாவுடன் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளன என்று இலங்கை வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பல முனைகளில் அவுஸ்திரேலியா தொடர்ந்தும் நல்கிய உதவியைப் பாராட்டிய வெளிநாட்டு அமைச்சர் பீரிஸ் குறிப்பாக, கடல் மார்க்கமான ஒழுங்கற்ற இடம்பெயர்வு, கொரோனாவை எதிர்த்துப் போராடுதல், கல்வி, தொழில்நுட்ப மற்றும் தொழிற்பயிற்சி, பொருளாதார மற்றும் முதலீட்டுத் துறைகளில் ஆஸ்திரேலியாவால் ஈடுசெய்யப்பட்ட ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பு மற்றும் ஆர்வத்தை வலியுறுத்தினார்.

வெளிநாட்டு அமைச்சரின் நியமனத்துக்காக தனது பாராட்டுக்களைப் பீரிஸுக்குத் தெரிவித்த ஆஸி. தூதுவர் ஹொலி, சமூகப் பொருளாதார அபிவிருத்திச் செயற்பாட்டில் இலங்கைக்கு உதவுவதற்கு அவுஸ்திரேலியா தயாராக இருப்பதாக மீண்டும் வலியுறுத்தினார்.

இந்து சமுத்திரத்தின் அண்டை நாடுகளாக இருப்பதால், எதிர்கால கடல் பேரழிவுகளைத் தடுத்தல் மற்றும் சர்வதேச மற்றும் பிராந்திய மன்றங்களிலான ஒத்துழைப்பு ஆகியவற்றில் கடல்சார் துறையில் நெருக்கமான ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை இரு தரப்பினரும் கண்டறிந்தனர்.

இலங்கை மற்றும் அவுஸ்திரேலியா இடையே இராஜதந்திர உறவுகளை நிறுவியதன் 75ஆவது ஆண்டு நிறைவை 2022ஆம் ஆண்டு கொண்டாடுவதற்கு வெளிவிவகார அமைச்சரும் ஆஸி. தூதுவரும் ஒப்புக்கொண்டனர்.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே மற்றும் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (இ)

## 39 வயது பெண்...

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த யாழ்ப்பாணம், கொழும்புத்துறையைச் சேர்ந்த 39 வயதுடைய பெண் ஒருவரும் கொழும்புத் துறையைச் சேர்ந்த 76 வயதுடைய பெண் ஒருவருமே உயிரிழந்தனர்.

இதன்மூலம் யாழ். மாவட்டத்தில் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 220ஆக உயர்வடைந்துள்ளது.

## ஒரே நாளில்...

ரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 8 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

நேற்றுமுன்தினம் 209 பேர் கொரோனாத் தொற்றால் மரணித்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதையடுத்து கொரோனா தொற்றால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 8,157 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் மரணித்த 209 பேரில் 108 ஆண்களும், 101 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதில் 31 ஆண்கள், 15 பெண்கள் என 46 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 163 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 77 ஆண்களும், 86 பெண்களும் அடங்குகின்றனர். (இ)

## ஒரே நாளில்...

ஆயிரத்து 139 பேர் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து சிகிச்சை நிலையங்களிலிருந்து வெளியேறியுள்ளனர்.

இதற்கமைய, நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 51 ஆயிரத்து 69 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

## நாட்டை நீண்ட...

வைரஸ் தொற்றை கட்டுப்படுத்தி நாட்டையும் மக்களையும் பாதுகாப்பதற்கு சுகாதார தரப்பினர், பாதுகாப்பு தரப்பினர் மற்றும் முன்கள பணியாளர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர். எனவே, நாட்டு மக்களும் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.” - எனவும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

## அமைச்சர்...

தொடர்பில் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், இலங்கையின் புதிய வெளிவிவகார அமைச்சருடன் இணைந்து பணியாற்றும் விருப்பத்தை வெளியிட்டிருப்பதாக கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இருதரப்பு உறவுக்கு வழிகாட்டும் சிறந்த அயலுறவு, நட்புறவின் முக்கியத்துவம் மற்றும் தலைமைத்துவத்தின் இலக்குக்கு அமைவாக அமைச்சர் பீரிஸுடன் இணைந்து பணியாற்ற விரும்புவதாக இந்தக் கடிதத்தில் இந்திய அமைச்சர் குறிப்பிட்டிருக்கின்றார்.

வெளிவிவகார அமைச்சராக பேராசிரியர் பீரிஸ் பதவியேற்றுக்கொண்ட உடனடியாகவே அவரைச் சந்தித்த இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே இரு தரப்பு உறவுகள் குறித்து பேச்சுநடத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈழநாடு
Eelanadu

## மரண அறிவித்தல்



மலர்வு
10 - 05 - 1931

உதிர்வு
24 - 08 - 2021

### திருமதி
### சுப்பிரமணியம் பாக்கியம்

யாழ். இராமநாதன் வீதி கலட்டியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Blanc-Mesnil ஐ வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பாக்கியம் 24.08.2021 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார், நாகமுத்து – முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், கிருஸ்ணபிள்ளை – செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, கதிரவேலு மற்றும் இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிருஸ்ணபேபி, வரதன், காலஞ்சென்ற பன்னீர்ச்செல்வம் மற்றும் சாந்தி, மஞ்சு, கேதீஸ்வரன், மோகன் ஆகியோரின் அன்புத் தாயாரும்,யோகரட்ணம், இப்போலிற்றா(சாந்தி), வதனி, தேவன், குணம், அருந்ததி, உஷாவாணி ஆகியோரின் அன்பு மாமியாரும்,குயின்சன், பிரான்சியன், லூத்தமி, வினோத்தமி, லெனோறா, ஏஞ்சலா, கீர்த்தனா, அஜித், விவேக்சன், சுவேஜா, சுவேக்சன், ஆதவன் சகானா, சங்கீதா, சஞ்ஜீவன், சரன்ஜா, அஸ்விகா, கெவின்சிகா, அஷ்வரியா, லித்திஸ்ஷியா, ஜனாத், ஜெனனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும்,ஜெய்தன் உவாகன், அயன், தேவனா, அர்ஜுன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

பார்வைக்கு
Wednesday, 25 Aug 2021 3:00 PM - 3:30 PM
Thursday, 26 Aug 2021 3:00 PM - 3:30 PM
Saturday, 28 Aug 2021 3:00 PM - 3:30 PM
Sunday, 29 Aug 2021 3:00 PM - 3:30 PM
Funérarium. 83 Bd Robert Ballanger, 93420 Villepinte, France

கிரியை
Monday, 30 Aug 2021 12:30 PM - 2:30 PM
Funérarium. 83 Bd Robert Ballanger, 93420 Villepinte, France

தகனம்
Monday,30 Aug 2021 3:15 PM
Cimetière communal 93150 Av. Descartes> 93150 Le Blanc-Mesnil, France

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
குணம் (மருமகன்) –
+33651580782

தகவல்
குடும்பத்தினர்.

# தோல்வியடைந்த இந்த அரசால் நாட்டை நிர்வகிக்கவே முடியாது!

## கபீர் ஹாசீம் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஓக.27

**“இந்த அரசால் தமது அரசில் அங்கம் வகிப்பர்களையே நிர்வகிக்க முடியவில்லை. இந்நிலையில் அவர்கள் எவ்வாறு நாட்டை நிர்வகிப்பர்? எவ்வாறு பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பர்? தோல்வியடைந்த இந்த அரசால் இவை இரண்டையும் செய்யவே முடியாது.”**

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“இந்த அரசு மக்களுக்கான அரசு அல்ல. மக்களாட்சி அரசு எனக் கூறிக்கொண்டே இந்த அரசு ஆட்சிக்கு வந்தது. வறிய மக்களைத் துன்புறுத்தி வாழும் அரசாகவே தற்போதைய அரசு உள்ளது.

கொரோனா நிதியம் அமைக்கப்பட்டது. அதன் ஊடாக நிதி சேகரிக்கப்பட்டது. நாமும் நிதியை வழங்கியிருந்தோம். ஆனால், அதன் ஊடாக உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன எனத் தெரியவில்லை. ஏனெனில் உரிய நேரத்தில் கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. மக்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனையையேனும் செய்வதில்லை. மாறாக பி.சி.ஆர்., அன்ரிஜென் பரிசோதனைகளின் ஊடாக பெருமளவு உழைக்கின்றனர்.

அதேபோல் தனிமைப்படுத்தலுக்காக மக்களைக் ஹோட்டல்களுக்கு அனுப்பி அதன் ஊடாக உழைக்கின்றனர்.

இந்நிலையில், எமது சம்பளப் பணத்தை எந்த நம்பிக்கையில் அவர்களுக்குத் தியாகம் செய்வது?

சஜித் பிரேமதாஸ, அரசு இந்த நடவடிக்கையை ஆரம்பிக் முன்னர் எதிர்க்கட்சி என்ற வகையில் வைத்தியசாலைகளுக்கு உதவியுள்ளார். ஆகவே, நாம் எமது தலைவரை நம்புகின்றோம். அதன்காரணமாக நாம் எமது தலைவரிடமே நிதியைக் கையளிப்போம்” - என்றார். (இ)

## கசிப்பு விற்பனை; இளைஞர் கைது!



வடமராட்சி, ஓக. 29

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள தற்போதய சூழலில் சட்டவிரோத கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அத்துடன் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புலோலி, வறாத்துப்பளையில் சட்டவிரோதமாக கசிப்பு விற்பனையில் ஈடுபடுவதாக மக்கள் வழங்கிய இரகசியத் தகலையடுத்து சம்பவ இடத்தைப் பொலிஸார் சுற்றிவளைத்தனர்.

இதன்மோது 11 லீற்றர் கசிப்பை விற்பனைக்காக வைத்திருந்த 26 வயதுடைய சந்தேகநபர் சான்றுப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ - 02)

## இலங்கையில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 40 வீதத்தால் உயர்வு

### உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 27

இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளாவோர் எண்ணிக்கை 40 வீதமாக அதிகரித்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலைதீவு, இலங்கை, தீமோர்-லெசுடே சனநாயக குடியரசு தவிர்ந்த தென்கிழக்கு ஆசியாவின் சில நாடுகளில் கொவிட் தொற்றுக்குள்ளாகும் நோயாளர்களின் எண்ணிகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக இந்த மாதம் 24 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள வாராந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனைத் தவிர, இலங்கையின் மத்திய மாகாணத்தில் கடந்த வாரம் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக 20 ஆம் திகதி வெளியிடப்பட்ட உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும் அதிகரிப்பு காணப்படுவதாகவும் மேல் மாகாணத்திலேயே அதிகூடிய (57 %) தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.




## மேலும் நான்கு சிகிச்சை பிரிவுகள் கொரோனா விடுதிகளாக மாற்றம்

காலி, ஓக. 27

காலி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் கராப்பிட்டிய வைத்தியசாலையின் மேலும் நான்கு நோயாளர் விடுதிகள் கொரோனா சிகிச்சை விடுதிப் பிரிவுகளாக மாற்றப்பட்டுள்ளன.

இதற்கமைவாக குறித்த வைத்தியசாலையின் 35, 36 மற்றும் 68 ஆவது விடுதிப் பிரிவுகளுக்கு மேலதிக மாக 11,15,17 மற்றும் 21 ஆகிய விடுதிப் பிரி வுகள் கொரோனா சிகிச்சை விடுதிப் பிரி வுகளாக மாற்றப்பட் டுள்ளன.

தென் மாகாணத்தில் 48 ஆயிரத்து 619 கொரோனாத் தொற்றாளர்கள் இதுவரை இனங் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 24,830 பேர் காலி மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (இ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.08.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு-மறுஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்- சைக்கோ,பீசா திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹொலிவுட் சுப்பர் 10

**இரவு**

7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்-நகைச்சுவை நிகழ்ச்சி




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்- பொருளாதாரம் பகுதி-02



10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**

12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: ஜெபங்கேளும் திருகோணமலை நிகழ்ச்சி
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : அன்பியம் சனி மறுஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (யாழ்ப்பாணம்)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (யாழ்ப்பாணம்)

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்